பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 10 | சனிக்கிழமை | (24.05.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 156

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பிடிப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## மட்டு.சென்ற கனடியத் தூதுவர் தளபதி கருணாவுடன் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்ட கனடியத் தூதுவர் செல்வி வலேற்றேய்மண்ட் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா அம்மானைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்று மாலை 3.45மணியளவில் கரடியனாறு தேனகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் சிறுவர்களைப் படையில் சேர்த்தல்,கப்பம் பெறுதல் மற்றும் முஸ்லிம் சமூகத்தினருடனான முரண்பாடுகள் தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் என்பன தொடர்பாக தளபதியிடம் தூதுவர் விரிவாகக் கேட்டறிந்தார்.அத்துடன் விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களுடன் தற்போது மேற்கொண்டு வரும் இணக்கப்பாடான நடவடிக்கைகளையும் தூதுவர் பாராட்டினார்.

இசசந்திப்பை முடித்துக் கொண்ட தூதுவர் மட்டக்களப்பு நகரில் உள்ள ஈ.பி.டி.பி,ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர் அணி) ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

இதன் போது தமது சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளுக்கு உரிய (10ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் கருத்து முரண்பாட்டை நீக்க
## யப்பான்,நோர்வே தூதர்கள் இறுதிக் கட்டமாக இலங்கை வருவர்

(கொழும்பு)

யப்பானின் விஷேட தூதுவர் யசூசி அகாசியும், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அரச உயர் மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தையும்,தமிழீழ விடுதலைப் புலிகளையும் யப்பான் நிதியுதவி மாநாட்டில் பங்கு பற்றச் செய்யும் பொருட்டு இரு தரப்பினருக்கிடையில் காணப்படும் கருத்து முரண்பாடுகளைக் களையும் இறுதி முயற்சியாகவே இவர்கள் கொழும்புக்கு வருகை தரவுள்ளனர்.

அரசு-புலிகள் சமாதானப் பேச்சின் போது வடக்குக் கிழக்கை புனரமைப்பதற்கு சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டது.ஆனால் அந்த அமைப்பு சட்டச் சிக்கலை எதிர்கொள்வதாக அரச தரப்பினால் தற்போது சுட்டிக் காட்டப்படுகிறது. இதனால் சிரான் அமைப்பு செயலிழந்த ஒரு கட்டத்தில் உள்ளது.

இந்த நிலையில் வடக்குக் கிழக்கை புனரமைப்பதற்காக அரசாங்கதால் முன்மொழியப்பட்டுள்ள ''மத்திய ஒருங்கிணைப்புச் செயலகத்தின்'' செயற்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகளுக்கும்,அரச தரப்பிற்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தவும் இதன் மூலம் இரு தரப்பையும் யப்பான் மாநாட்டில் பங்கு பற்றச் செய்யும் முயற்சியிலும் தூதுவர்கள் ஈடுபடவுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (த)

# சர்வதேச சமூகம் உதவத் தயார்
# யப்பான் மாநாடு நடக்காவிடின் இலங்கை மக்களுக்கு பெரு நட்டம்!

## யப்பான் அரசு அறிக்கை

**சனி மாற்றம் உங்கள் பலன் எப்படி? உள்ளே:-**

(டோக்கியோ)

**ஜுன் மாதம் 9-ம்,10-ம் திகதிகளில் டோக்கியோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கான நிதி உதவி வழங்கும் மாநாடு திட்டமிட்டவாறு நடை பெறாவிட்டால்,யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு பாரிய நட்டமேற்படுமென்று யப்பான் அரசு எச்சரித்துள்ளது.**

**இலங்கை அரசுடன் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளுக்கு விடுதலைப் புலிகள் தீர்வு காண வேண்டும் என்றும் யப்பான் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

அரசுக்கும்,தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஏற்பட்டு,இனப் பிரச்சினைத்தீர்வு குறித்து ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிந்து 15 மாத இடைவெளிக்குப் பின் இருசாராருக்கும் இடையில் கருத்துமுரண்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையில்,யப்பான் அரசு நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றின் மூலமே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

டோக்கியோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் இம்மாநாடு திட்டமிட்டவாறு நடைபெறாவிட்டால் இலங்கை மக்கள் அடையக் கூடிய நட்டம் தொடர்பாக யப்பான் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் (10ம் பக்கம் பார்க்க)

## மத்திய குழு தீர்மானித்தால் எனது பதவியை துறப்பேன்
### ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பதவியில் இருந்து வீ.ஆனந்தசங்கரி எம்பியை விலகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வருவதை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி பிளவுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வீ.ஆனந்தசங்கரியை நேரில் சந்தித்து கூட்டணித் தலைமைப் பதவியில் இருந்து விலகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே தமிழர் விடுதலைக் கூட்டணி பிளவுபடும் அபாயம் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு தன்னைக் கோரிய அந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு தீர்மானித்தால் மாத்திரமே தலைவர் பதவியில் இருந்து விலக முடியும் என்று ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ம)

## புலிகளின் கோரிக்கை அரசிற்கு கிடைக்கவில்லை
### அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை ஒன்றினை அமைப்பது தொடர்பான விடுதலைப்புலிகளின் யோசனை இதுவரை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை என அமைச்சர் பேராசியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் இடைக் கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டு வலுவான அதிகாரக் கட்டமைப்புடன் செயற்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் கருத்து வெளியிட்டுள்ளமை தொடர்பாகவே அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் (10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்தை வழங்க
## அரசுக்கு அழுத்தம் கொடுக்குக
## தூதர்களிடம் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

அதிகாரம் கொண்ட இடைக்கால அமைப்பொன்றை விடுதலைப் புலிகளிடம் வழங்குவதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் அரசுக்குக் கொடுகக வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச இராஜதந்திரிகளை நேரில் சந்தித்து வற்புறுத்தி வருகின்றனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் இந் நடவடிக்கையின் ஒரு கட்டமாக பிரித்தானியத் தூதுவரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன்,என்.ரவிராஜ்,ஜோசப் பரராஜசிங்கம்,கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரே வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்து வருகின்றனர். (வ)

## கடற்படைச் சிப்பாய் புலிகளால் கைது

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த கடற்படைச் சிப்பாய் புலிகளினால் நேற்று கைது செய்யப்பட்டார்.

திருகோணமலை கடவண்ணைக் குளம் பகுதியில் வைத்தே பிரஸ்தாபச் சிப்பாய் புலிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சிப்பாய் விடுதலைப் புலிகளினால் தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த)

## காரைநகர் கடற்படை சிப்பாய் புலிகளிடம் சரண்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து தன்னிச்சையாக வெளியேறி பொது மக்களிடம் தஞ்சம் புகுந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவூடாக மீண்டும் காரைநகர் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 7மணிளவில் மேற்படி முகாமைச் சேர்ந்த எஸ்.பி.தம்மிகறுவான் குமார(வயது22)என்ற கடற்படைச் சிப்பாயே தன்னிச்சையாக முகாமை விட்டு வெளியேறி மீண்டும் (10ம் பக்கம் பார்க்க)

# மீள் குடியமர்வுப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்க!

## அரச அதிபர் பிரதமரின் செயலருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக நிலவும் யாழ். குடாநாட்டு மக்களின் மீள் குடியமர்வுப் பிரச்சினைக்கு இம்மாதமுடிவுக்குள் உறுதியான பதில் ஒன்றை தராத பட்சத்தில் செயலகத்தின் முன்னால் தொடர் மறியற் போராட்டங்களை நடத்தப்போவதாக பாதிக்கப்பட்ட மக்கள் அறிவித்துள்ளார்கள்.

இவ்வாறு குறிப்பிட்ட யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனுக்கு அண்மையில் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,மீளக்குடியமர்வதற்கு அனுமதி கோரி வலிகாமம் வடக்கைச்சேர்ந்த சுமார்1000 குடிமக்கள் கடந்த 20.05.2003 காலை 7.30 மணிமுதல் மு.ப.11 மணிவரை யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதே திகதியில் பிரதமருக்கு முகவரியிட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் ஆங்கில மொழிபெயர்ப்புடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

இதுவரை வலி. வடக்கு பிரதேசத்தில் 28 கிராம அலுவலர் பிரிவுகளில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற காரணத்தால் மீளக்குடியமரும் அனுமதி வழங்கப்படவில்லை.

தற்போது தெல்லிப்பழை சந்தி வரையே மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளது. குடிமக்களின் நீண்டகாலப் பிரச்சினையாகிய இதைக் கருத்திற் கொண்டு நியாயமான அளவு இடங்களில் குடியமர அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இவ்விடயத்தில் அரசியல் தீர்வு அவசியம் என்றுள்ளது. (உ)

# அபி. லொத்தர் சபை பொறுப்பு விவகாரம் அரசியல் அமைப்பில் இல்லை

## பொ. ஐ. மு. பா. உ. தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்பதற்கு முன்னர் பிரதமருடன் கலந்துரையட வேண்டும் என அரசியல் அமைப்பில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப் படவில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரபிரியதர்ஷனயாப்ப தெரிவித்துள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் ஆட்சியைக் கையளித்தாலும் ஜனாதிபதிக்கு மக்கள் கொடுத்த அதிகாரம் இரத்தரகமாட்டாது.

இதனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பொதுஜன ஐக்கிய முன்னணி நிராகரிக்கின்றது எனவும் அனுரா பிரியதர்ஷனயாப்ப மேலும் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்பதுபற்றி அரசியல் யாப்பின் 44 ஆவது சரத்திலும் 3 ஆம் பிரிவில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் இவற்றில் எந்தவொரு நடைமுறையையும் ஜனாதிபதி கடைப்பிடிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை மக்களின் ஆணையைப் பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியில் இருக்கும்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னிச்சையான முடிவுகளை எடுக்கமுடியாது என நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரமபெரேரா தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின்மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது ஜனாதிபதி முக்கிய விடயங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்க பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுடன் கலந்துரை யாடவேண்டும் என அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான விடயத்தில் ஜனாதிபதி சிந்தித்து செயல்பட வேண்டும்.

கடந்த காலங்களில் அரசியல் விடயங்கள் சம்மந்தமாக ஜனாதிபதியுடன் ஏற்பட்ட பிரச்சினை களுக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டதைப் போன்று இப்பிரச்சினைக்கும் தீர்வுகண்டிருக்க முடியும். எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

### கைதிகளை அழைத்துச் சென்று

# உறவினர்களை சந்திக்கவைக்க உள்துறை அமைச்சர் ஏற்பாடு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகளை அவர்களின் சொந்த இடங்களிற்கு உலங்கு வானூர்தி மூலம் கூட்டிச்சென்று அவர்களின் உறவினர்களை சந்திக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி சிறைச்சாலை ஆணையாளரான றூமி மர்சூக் கருத்துக் கூறுகையில்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான ஒரு முன்னேற்பாடாகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மாதமொருமுறை இக்கைதிகளை இவ்வாறு கூட்டிச் செல்வது என்றும் ஒருமணிநேரம் இவர்களை பெற்றோரோடு பேசுவதற்கு அனுமதிப்பது என்றும் உள்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

மேற்படி கைதிகளின் உறவினர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இருந்து பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தே களுத்துறைக்கு வந்து பார்வையிடுகின்றனர்.

இதற்கு சுமார் 5 ஆயிரம் ரூபாவரை செலவிட்டு வருகின்றனர். இதனை தடுப்பதன் பொருட்டே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

அதேசமயம் கடந்த 14 ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை இச்சிறைச்சாலையில் 3 தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர் எனச் சுட்டிக்காட்டிய ஆணையாளர் உள்துறை அமைச்சர் கடந்த 19 ஆம் திகதி சிறைச்சாலைக்கு சென்று இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்தபின்னரே அவர்கள் உண்ணாவிரதத்தினைக் கைவிட்டனர் என்றார்.

தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் 65தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றனர் அவர்களை விடுதலை செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றி சட்டமா அதிபர்உயர் நீதிமன்ற நீதியரசர்களுடன் கலந்துரையாடிவருகின்றனர்.

பெரும்பாலும் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளிற்கு இக்கைதிகளை இடமாற்றம் செய்யப்படலாம் என்றும் ஆணையாளர் றூமிமாசூக் மேலும் தெரிவித்தார். (உ-10)

# இருபது வருடப் போரில் 5ஆயிரம் கிணறுகள் சேதம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 20 வருடகாலத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது மொத்தமாக 5 ஆயிரம் கிணறுகள் சேதமடைந்துள்ளன என அண்மையில் திரட்டப்பட்ட புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விதம் சேதமடைந்துள்ள மொத்தக்கிணறுகளில் ஆயிரம் கிணறுகளை தலா 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கு 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து தரும்படி உலக வங்கியிடம் நியாப்திட்ட அதிகாரிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

இதேவேளை மாவட்டத்தில் மேட்டுநிலப்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் கிணற்றுநீரையே அதிகம் பயன்படுத்தி வந்தமையினால் சேதமடைந்துள்ள இக்கிணறுகளில் இருந்து நீர் அள்ளுவதற்கு பெரும் கஷ்டங்களை மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர்கள் எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## மாதாந்தக் கூட்டம்

(ஊரெழு)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியில் உள்ள மன்ற அலுவலகத்தில் மன்றத் தலைவர் திருமதி என். ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-3,95)

## கூட்டம்

(யாழ்ப்பணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை மு.ப 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## ரயில்வே ஊழியர்கள் கைது

(கொழும்பு)

ரயில் தண்டவாளங்களைக் கழற்றி விற்பனை செய்து வந்த ரயில்வே ஊழியர்கள் 3 பேரை கட்டுகஸ் தோட்டப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்த றக் வண்டியையும்,இரும்புத் தண்டவாளங்களையும் பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர். (தி)

## சேவை நலன் பாராட்டு விழா

(ஆனைக்கோட்டை)

யாழ்.வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதனின் சேவை நலன் பாராட்டு விழா நாளை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ201)

## இந்து மாநாட்டு நிகழ்ச்சித் தொகுப்பு நாளை ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சினால் நடத்தி முடிக்கப்பட்ட இரண்டாவது உலக இந்துமாநாட்டு நிகழ்வின் தொகுப்பு நாளை மாலை 7.55. மணிக்கு இலங்கை ரூபவவாகினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் ஒளிபரப்பான ஐ. அலைவரிசையில் ஒலிபரப்பப்படவுள்ளது. (உ-)

### இலங்கை ஊடாக

# இத்தாலி செல்ல முயன்ற 26 இந்தியர்கள் கைது

(கொழும்பு)

இலங்கையூடாக இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்லமுயன்ற 26 இந்தியர்களை நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பொலீஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

மீன்பிடிப் படகுமூலம் இத்தாலிக்குச் செல்லஇருந்த இவர்கள் நீர்கொழும்பு பகுதியில் விடுதி ஒன்றில் மறைந்திருந்தபோது பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இவர்களில் 14 பேருக்கு இலங்கையில் தங்கி இருப்பதற்கான விசா அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என கொச்சிக்கடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தியர்களை இத்தாலிக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்ட முகவரை பொலிஸார் தேடிவருகின்றனர். (தி)

# வெள்ளப்பெருக்கினால் 1500 கோடி சொத்திழப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களினால் சுமார் ஆயிரத்து 500 கோடி பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் மதிப்பிட்டுளளது.

குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமும், மத்திய வங்கியும் இணைந்து இம்மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளன.

இம்மதிப்பீட்டின்படி களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு காரணமாகவும் மண் சரிவுகளினாலும் 205 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 137 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 80 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 22 பேரும், காலி மாவட்டத்தில் 17 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 8 பேரும் இவ்வாறு இறந்துள்ளனர்.

ஒரு லட்சத்து 76 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இவற்றில் மாத்தறையில் 68 ஆயிரம் குடும்பங்களும், இரத்தினபுரியில் 47 ஆயிரம் குடும்பங்களும் காலியில் 37 ஆயிரம் குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

இவ்வெள்ளப்பெருக்கு காரணமாக 24 குடியிருப்புகள் முற்றாக அழிந்துள்ளதுடன் 26 ஆயிரத்து 200 வீடுகள் சேதமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. (தி)

# தென்பகுதி இனவாதிகள் புலிகள் குறித்த நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தென்பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்களை நேரில் சென்று வழங்குவதானது அவர்களின் மனிதாபிமானத்தை உணர்த்துகிறது.

காணிஅமைச்சர் ராஜிதசேனரட்ண தமிழீழ விடுதலைப்புலிகளினால் கையளிக்கப்பட்ட ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை களுத்துறையில் பெற்றுக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளை எதிர்த்து வரும் இனவாத சக்திகள் தங்கள் நிலைப்பாடுகளை மீளாய்வுசெய்யவேண்டும்.

இதன் மூலம் தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையிலான நட்புறவு பேனப்பட்டு வருகிறது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (தி)

# சட்டவிரோத மின்சாரம் பெற்றவர்கள் பிடிபட்டனர்

(வல்வெட்டித்துறை)

சட்டவிரோதமான முறையில் மின் சாரம் பெற்ற சிலர் மின்சார சபை யிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

கடந்த. புதன்கிழமை கம்பர் மலை, உடுப்பிட்டி, கொற்றாவத்தை மற்றும் நவிண்டில் ஆகிய இடங்களில் மின்சார சபையும், வல்வெட்டித்துறைப் பொலி ஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர் நடவடிக்கையிலேயே சட்ட விரோதமான மின்பாவனையாளர்கள் 13 பேர் பிடிபட்டனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு, நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரையிலான தொகை குற்றப்பணமாக அறவிடப்பட்டதுடன், கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (உ-63)

# இந்திய மீட்புப்பணியாளர் சென்ற படகு கவிழ்ந்தது

## 6 பேர் மயிரிழையில் உயிர்பிழைத்தனர்

(கொழும்பு)

தென்னிலங்கையில் வெள்ளத்தில் அகப்பட்ட பொதுமக்களை மீட்கச் சென்ற இந்திய மீட்புப் பணியாளர்களின் படகு கவிழ்ந்ததில் அதிலிருந்த 6 மீட்புப் பணியாளர்களும் மயிரிழையில் உயிர் தப்பினார்கள்.

இச்சம்பவம் களுத்துறை நகரில் இருந்து சுமார் 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள தெபுவன என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது மேற்படி இடத்தில் வெள்ள நீர்மட்டம் திடீரென உயர்ந்ததனால் அப்பகுதியில் வாழும் மக்கள் தமக்கு உதவிசெய்யுமாறு அபயக்குரல் எழுப்பியதாகவும் இதனையடுத்து இப்பகுதிக்கு விரைந்த இந்திய இலங்கை மீட்புப் பணியாளர்கள் தமது படகில் அவ்விடத்துக்கு விரைந்தனர் என்றும் தீடீரென அங்கு வெள்ள நீர் அதிவேகமாக பாய்ந்ததில் இவர்களின் படகு கவிழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

இவ்மீட்புப் பணியில் ஈடுபட்ட ஆறுபேரில் இரண்டுபேர் இலங்கைக் கடற்படையினர் ஒருவர் பொலிஸார் ஏனையவர்கள் இந்திஎயாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

# சனி, வியாழன், ராகு, கேது மாற்றங்களால் ஏற்படும் பொதுப் பலனை அறிந்து கொள்ளுங்கள்!

**சனிமாற்றம் (22.05.2003) பொதுப் பலன்கள்**

**22.05.2003இல் சனி இடபராசியில் இருந்து மிதுன ராசிக்கு மாற்றமடைந்து இரண்டரை வருடங்கள் வரை மிதுனத்திலேயே சஞ்சாரம் செய்யும்.**

**23.07.2003 இல் வியாழன் கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை சிங்க ராசியிலேயே வியாழன் சஞ்சாரம் செய்யும்.**

**14.08.2003இல் இராகு, கேதுக்கள் இடபம், விருட்சிகத்தில் இருந்து முறையே மேடம், துலாம் இராசிகளுக்கு மாற்ற மடைந்து ஒன்றரை வருடங்கள் வரை அவ ராசியிலேயே சஞ்சாரம் செய்யும். இக்கிரக மாற்றத்தினால் இவ்வருடம் இலங்கையில் அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.**

**மேடம்:**

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை, 1ம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த மேட ராசியினருக்கு 22.05.2003 முதல் 26.06.2005 வரை வீரிய விக்ரக பராக்ரமஸ்தானம் என்னும் 3ல் சஞ்சரிப்பார்)*

மேன்மையை நாடும் மேட ராசி நேயர்களே! கடந்த 21/2 வருட காலமாக சனி பகவான் உமது இராசிக்கு 2ல் அமர்ந்து 7 1/2 ஆண்டு சனியின் கடைசிப் பகுதியை நடத்தினார். இதனால் தளராத மனஉறுதி கிடைத்தது. வாக்கினால வளமும் நலமும் சேர்ந்தது. மனைவி பேரில் வீடு, மனை, பூமி, வண்டி, வாகனம் என வாங்க நேர்ந்தது. புதிய தொழிலில் முதலீடு செய்ய இடமுண்டு. மகன் அல்லது மகள் கல்வியில் முன்னேற்றம் காணமுடிந்தது.

சனி பகவான் தற்காலம் உமது இராசிக்கு 3ல் வருகிறார். ஒரு வழியாக ஏழரைச் சனி முடிந்தது. இனி எதற்கும் அச்சம் வேண்டாம். சனி பகவானுக்கு நற்பலன் தரும் வீடுகள் 3,6,11 இதில் முதன்மையானது ஆகும். எடுத்த காரியம் யாவிலும் வெற்றியே கிட்டும். பெரிய யோக பாக்கியங்கள் எல்லாம் நன்றாக வந்து சேரும். வீடு, மனை, பூமி, வண்டி, வாகனம் எனப் பிரஜைத் துக்கள் சேரும். சிலருக்கு இழந்த செல்வம் மீண்டும்வரும். சனி பகவான் தனது 3,7,10ஆகிய பார்வையினால் உமது இராசிக்கு 5,9,12 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

3வது பார்வையினால் உமது இராசிக்கு 5ஆம் வீட்டைப் பார்வை செய்வதால் வேலையில் நிரந்தரம் கிட்டும். புத்திரபாக்கியம் உண்டாகும். சிலருக்கு மறுமணம் நடக்க இடமுண்டு. வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். திடீர் தனலாபம், பங்குச் சந்தை போன்றவை நன்மை தரும்.

7வது பார்வையினால் உமது இராசிக்கு 9ஆம் வீட்டை பார்வை செய்வதால் தந்தைக்கு யோகம் கிட்டும். சிலருக்கு தந்தை மூலம் தனலாபம் கிட்டும். திருப்பணிகளில் ஈடுபடநேரிடும். வெளிநாட்டுத் தொடர்பு கிடைக்கும். புதிய முதலீடு பெருகும். மகன் அல்லது மகள் பேரில் கணிசமான தொகை முதலீடு செய்ய இடமுண்டு.

10வது பார்வையினால் உமது இராசிக்கு 12வது வீட்டைப் பார்வை செய்வதால் சரளமான பணப் புழக்கம் உண்டு. எனினும் வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உடன் பைசலாகும். வியாபார அல்லது உத்தியோக விஷயங்களில் நேரடி கவனம் தேவை.

*வியாபாரிகளுக்கு:* தொழில்நுட்ப உதிரிப்பாகங்கள் மற்றும் இரும்பு வர்ணம் லாகிரி வஸ்துக்கள், குடிநீர் விநியோகம், சானிடரி சாதனங்கள், எலற்றிக்கல், எலக்ட்ரானிக்ஸ் போன்ற பிரிவினர் ஏற்றமடைவர். பழைய ஸ்டாக் நல்ல விலைக்குப் போகும்.

*விவசாயிகளுக்கு:* அமோக விளைச்சல் கிட்டும். பராமரிப்பு செலவுகளில் பிரத்தியேக கவனம் செலுத்தவும். பயிர்ப் பாதுகாப்பில் தனிக் கவனம் தேவை. பணப் பயிர் நல்ல லாபம் தரும். கரும்பு மற்றும் மஞ்சள் நிறப் பயிர்கள் நல்ல மகசூல் தரும்.

*பெண்களுக்கு:* எண்ணப்படியே மணவாழ்வு மலரும். சிலருக்கு மறுமணம் புதிய வாய்ப்புள்ளது. புத்திர பாக்கியம் கிட்டும். கருவுற்ற தாய்மார்கள் நீண்ட தூரபிரயாணம் தவிர்த்தல் நலம். வேலை பார்க்கும் பெண்கள் விரும்பிய இடமாற்றம் பெறுவர்.

*மாணவர்களுக்கு:* எஞ்சினியரிங் தொழில் நுட்பம், மெரைன் டெக்னலஜி, தர நிர்ணயம், நீர்வளம், கேட்டரிங், டெக்னலஜி மக்கள் தொடர்பு போன்றவை பயிலும் மாணவர்கள் ஏற்றம் பெறுவர். கல்விச் சுற்றுலா நன்மை தரும்.

*கலைஞர்களுக்கு:* நடிப்பு, நடனம், ஸ்டண்ட், கிறபிக்ஸ், டபிங் போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர். வெளிநாட்டோர் பயணங்களின் போது உமது உடமைகளில் அதிக கவனம் தேவை.

**குரு பகவான் சஞ்சார பலன்**

22.07.2003 வரை குரு பகவான் உமது இராசிக்கு 4இல் சஞ்சாரம் செய்வதால் வீடு, மனை, பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களால் வாழ்வில் வளமும் நலமும் கூடும். பிரயாண மூலம் தொழில் புரிவோர் மிக்க ஏற்றம் புரிவர். பெண்களுக்கு தாயார் வீட்டு உதவிகள் கிட்டும்.

23.07.2003 முதல் 14.08.2004 வரை குரு பகவான் உமது இராசிக்கு 5இல் வருகிறார். "அஞ்சிலே குரு வர பஞ்சம் போகும்!" என்பது விதி. இதனால் உமது வறுமை நீங்கும். கடன் அகலும். அம்மான் வகையினரால் அனுகூலம் உண்டு.

15.08.2004 முதல் 13.05.2005 வரை குரு பகவான் உமது இராசிக்கு 6இல் வருவதால் கடன் தீரும். வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். தந்தை மூலம் தனலாபம் கிட்டும். பகை விலகும். கோட் வழக்குகளில் நல்ல தீர்ப்புக் கிட்டும். எக்ஸ்போட் துறையில் ஆர்வம் உண்டாகும்.

14.05.2005 முதல் குரு பகவான் உமது இராசிக்கு 7இல் சஞ்சாரம். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் அகும். பிரிந்த தம்பதிகள் இணைந்து வாழ்வர். இறை அனுகூலம் கிட்டும். சிலர் மனைவியுடன் வெளிநாடு செல்ல நேரும். கூட்டாளிகளிடம் இணக்கமான போக்குகாணும்.

**ராகு பகவான் சஞ்சார பலன்**

14.08.2003 வரை ராகு பகவான் உமது இராசிக்கு 2இல் சஞ்சாரம். இதனால் அதிக செலவுகள் வரும். கைவிருப்புக்கள் கரையும். போக்கு வரத்தில் பணம் பத்திரம்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை ராகு பகவான் உமது ஜென்ம ராசியில் சஞ்சாரம். இதனால் இடம் மாறுதல் கிட்டும். திடீர் தனவரவுகள் பெருகும். எதிர்பாராத உதவிகள் கிட்டும்.

05.03.2005 முதல் 21.09.2006 வரை ராகு பகவான் உமது இராசிக்கு 12ல் சஞ்சாரம். இதனால் எதிர்பாராத செலவுகள் நெருக்கும். அகால உறக்கம். அகால போசனம் என அலைக்கழிப்புக்கு உள்ளாக நேரும்.

**கேது பகவான் சஞ்சாரப் பலன்**

14.08.2003 வரை கேது பகவான் உமது இராசிக்கு 8இல். இதனால் உமது புதிய முயற்சிகளில் ஒருவித சுணக்கம் நிலவினாலும் முடிவில் வெற்றியே கிட்டும்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை கேது பகவான் உமது இராசிக்கு 7ல் வருவதால் மனைவியின் உடல் நலத்தில் கவனம் தேவை. கூட்டுத் தொழிலில் இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பது நலம்.

05.03.2005 முதல் 21.09.2006 வரை கேது பகவான் உமது இராசிக்கு 6ல் வருவதால் ஞானிகள், மகான்கள் அருளாசி கிட்டும். இறை அருளால் பிரார்த்தனைகள் பலித மாகும்.

**சனிபகவான் சஞ்சாரப் பலன்கள்**

22.05.2003 முதல் 10.07.2003 வரை சனிபகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலில் அதிக உழைப்பும் முயற்சியும் தேவை. சிலருக்கு நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த பதவி உயர்வு கிட்டும். ஸ்ரீதேவி கருமாரி அம்மனை வழிபட காரியத்தில் எளிதில் வெற்றி கிட்டும். கடுமை குறையும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனி பகவான், இராகு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிட்டும். திடீர் தனலாபம் வர வாய்ப்புண்டு. விதவை மாதரால் அனுகூலம் உண்டு. கறுத்த மனிதரால் சகாயம் கிட்டும். துர்க்கை அம்மனை வழிபட நலம் கூடும்.



15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் குரு பகவான் சாரத்தில் சஞ்சாரம். இதனால் வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிட்டும். ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தில் வளமும் நலமும் கூடும். தொழிலில் முதலீடு அதிகரிக்க வாய்ப்புள்ளது. திருப்பணி செய்யும் யோகம் கிட்டும். வேல் வழிபாடு செய்ய வெற்றிகள் சேரும்.

**சனி பகவான் வக்கிரம்**

25.11.2003 முதல் 16.02.2004 வரை சனி பகவான் வக்கிரமாக சஞ்சாரம். இதனால் வரவேண்டிய பணவரவுகளில் அல்லது இலாப வரவுகளில் பங்குச் சந்தை போன்றவற்றில் மந்தமான போக்குக் காணும்.

13.11.2004 முதல் 13.03.2005 வரை சனி பகவான் வக்கிரத்தில். இத்தருணம் குரு பகவானின் சஞ்சார உதவியினால் கெடுதிகள் குறையும் வாய்ப்புள்ளது. கொடுக்கல் வாங்கலில் சுமுகநிலை காணலாம்.

**நட்சத்திர பலன்**

**அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கு:** சனி பகவான் செவ்வாய், ராகு, குரு சாரத்தில் சஞ்சாரம் செய்வதால் புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். மின்சாரம் போன்ற துறை விருத்தியடையும். பண வரவுகள் பஞ்சமில்லை. விநாயகர், துர்க்கை, முருகன் வழிபாடு செய்ய நன்று.

**பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கு:** சனி பகவான் செவ்வாய், ராகு, குரு சாரத்தில் சஞ்சாரம். இதில் குரு சாரம் மட்டும் சற்று நன்மையும் தீமையும் கலந்திருக்கும். ஏனைய சாரம் நன்மையே தரும். பணம் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. பிரதோஷ காலத்தில் சிவ வழிபாடு செய்க.

**கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கு:** சனி பகவான் செவ்வாய், ராகு, குரு சாரத்தில் சஞ்சாரம். ராகு சாரம் நீங்கலாக ஏனைய சாரம் உமக்கு நன்மையே தரும். அரசு அலுவலில் இருப்பவர்க்கு அரசு வழித் தீர்ப்புக்கள் அனுகூலமாகக் கிடைக்க இடமுண்டு. திருச்செந்தூர் முருகனை வழிபட நன்மைகள் நாடி வரும்.

**தராபலன்**

**அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பிரத்யக்குதாரையில் சஞ்சாரம் செய்வதால், எந்த அலுவலில் அல்லது முயற்சியில் ஈடுபட்டாலும் மிக்க கவனமுடன் இருப்பது நலன். விநாயகரை வழிபடவும் காரிய சித்தி மாலையை பாராயணம் செய்க.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனி பகவான் சாதக தாரையில் சஞ்சாரம் செய்வதால் தொட்டது துலங்கும். வெற்றிமீது வெற்றி வந்து சேரும். எதிர்பாராத உதவிகள் தேடி வரும். துர்க்கையம்மனை அல்லது வேலை வழிபட நன்று.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் வதை தாரையில் சஞ்சாரம் செய்வதால் பணம் சார்ந்த வழிகளில் மிக்க கவனமுடன் இருப்பது நலம். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. வெளிநாடு செல்வோர் பிரயாண ஆவணங்களை சரிபார்த்து செல்வது நலம். திருச்செந்தூர் முருகனை வழிபடலாம்.

**பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் ஷேமத் தாரையை சஞ்சாரம் செய்வதால் வாழ்வில் வளமும் நலமும் கூடும். மனைவியின் வழியில் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் ஒத்துழைப்புப் பெற வாய்ப்புள்ளது. நீண்ட கால நோய்கள் விலகும். ஸ்ரீதேவி கருமாரி அம்மனை வழிபட நன்று.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனி பகவான் பிரத்யக்கு தாரையில் சஞ்சாரம் செய்வதால், புதிய முயற்சிகளில் மிக்க கவனம் தேவை. திட்டமிட்டு ஈடுபட்டால் தெளிவிடாத இன்பம் கிட்டும். முன் அறிமுகம் இல்லாதவர்களிடம் பணத்தை பறிகொடுக்க வாய்ப்புள்ளது, கவனம்தேவை. துர்க்கையம் மனைத் துதிக்க நன்று. துர்க்காஸ் தவம் பாராயணம் செய்க.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் சாதகதாரையில் சஞ்சாரம் செய்வதால் அனுகூலம் தேடிவரும். சிலர் காதல் திருமணம் புரிய வாய்ப்புள்ளது. வெளிநாட்டிற்கு மனைவியுடன் செல்லும் வாய்ப்புள்ளது. புத்திரபாக்கியம் இல்லாதவர்க்கு புத்திரபாக்கியம் கிட்டும். தட்சணாமூர்த்தியை வழிபட நன்று.

**கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் உமது நட்சத்திரத்திற்கு விபத்துத் தாரையில் சஞ்சாரம் செய்வதால், பிரயாணத்தில் கவனம் தேவை. மின்சாதனங்களை கவனமுடன் கையாள்வது நலம் முருகனை வழிபட நலம் கிட்டும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனி பகவான் உமது நட்சத்திரத்திற்கு ஷேமத் தாரையில் சஞ்சாரம் செய்வதால், உடல் நலம் சீரடையும். அரசு அலுவலில் அனுகூலம் நிறைந்து காணும். பிரதோஷ வழிபாடு செய்ய நன்று.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் உமது நட்சத்திரத்திற்கு பிரத்யக்குத் தாரையில் சஞ்சாரம். இதனால் திட்டமிட்டு காரியமாற்றினால் இழப்புக்களைத் தவிர்க்கலாம். விடாமுயற்சி தேவை. திருச்செந்தூர் முருகனை வழிபட நன்று.

**பரிகாரம்**

தினசரி சனி பகவான் காயத்ரி மந்திரம் ஜெபிக்க நன்று. தினசரி காகைக்கு அன்னமிட நன்று. பிரதி வியாழன் தட்சணாமூர்த்திக்கு மஞ்சள் நிற மலர்களால் அர்ச்சனை செய்து வணங்கவும். பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனமும் செய்க. செவ்வாய் அல்லது ஞாயிறு ராகு காலத்தில் துர்க்கைக்குத் தீபமேற்றவும். துர்க்காஸ் தவம் பாராயணம் செய்க. தினசரி விநாயகரை வணங்கிய பின்பு உமது அன்றாட அலுவல் களை கவனிப்பது நலம் காரிய சித்தி மாலை பாராயணம் செய்க. (தொடரும்...)

**ஜோதிட மணி துரைராஜ்**

## ஊழியர்களுக்கு முற்பணம்

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சூறாவளி போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட அரச பணியாளர்களுக்கு வட்டியில்லா முற்பணக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்ட அரச பணியாளர்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன், மாதாந்தம் பெறும் சம்பளப் பணம், முற்பணக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதுடன், இப்பணம் 10 தவணைகளில் அறவிடப்படவுள்ளது.

இக்கொடுப்பனவு நிரந்தர ஊழியர்களுக்கு சாட்சிகள் இன்றியும் தற்காலிக மற்றும் சமயா சமய ஊழியர், களுக்கு இச்சலுகைகள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)


## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : "தாய் அன்பிற்கு நிகரேது"

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 க்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் ..............................

பாடசாலை ..............................

கற்கும் தரம் ..............................

உறுதிப்படுத்துகிறேன் ..............................

ஆசிரியர்

# ஐக்கிய நாடுகள் சபை விதித்த ஈராக் மீதான பொருளாதாரத் தடை 13 வருடங்களின் பின் நீக்கம்

## ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 14 நாடுகள் ஆதரவு

(நியுயோர்க்)

**ஈராக் மீது ஐக்கிய நாடுகள் சபையினால் கடந்த 13 வருட காலமாக விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை நேற்று முன்தினம் இரவுடன் நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டிருந்த ஈராக் மீதான பொருளாதாரத் தடையை நீக்கக் கோரும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் நடத்தப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளில் சிரியா தவிர்ந்த ஏனைய 14 நாடுகளும் ஆதரவாக வாக்களித்திருந்தன.

இந்த நிலையில் ஈராக் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையை ஐக்கிய நாடுகள் சபை விலக்கியுள்ளது.

இந்தப் பொருளாதாரத் தடை நீக்கம் ஈராக் மீதான போரில் வெற்றி கண்ட அமெரிக்காவிற்கு இரண்டாவதாகக் கிடைத்துள்ள பெரும் வெற்றியென ஐக்கிய நாடுகளின் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக் மீது பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் பெரும் வாய்ப்பாக இத்தடை நீக்கம் அமைந்துள்ளதென அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

1990ஆம் ஆண்டு குவைத் மீது படையெடுப்பு நடத்தியதைக் கண்டித்து ஈராக் மீது ஐ.நா பொருளாதார தடையை விதித்திருந்தது.

இந்தநிலையில் ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாக குற்றம் சாட்டிய அமெரிக்கா, ஈராக் மீது கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி போர் தொடுத்திருந்தது.

இதில் பெரும் வெற்றி கண்ட அமெரிக்கா, ஈராக்கில் புதிய நிர்வாகம் ஒன்றை அமைத்து புனர் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள நடவக்கைகளை எடுத்து வருகின்றது.

எனினும் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையினால் ஈராக் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை பெரும் தடையாக இருந்தது.

இதனையடுத்தே, இந்தத் தடையை நீக்கக் கோரி ஐ.நா. சபையில் புதிய தீர்மானம் ஒன்றை கடந்த மாதம் அமெரிக்கா முன்வைத்திருந்தது.


இத்தீர்மானத்தில் ஈராக் விடயத்தில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பிற்கு அமெரிக்கா அதிக முக்கியத்துவமளித்திருந்தது.

இதனை ஆராய்ந்த ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் சபையை கூட்டி இத்தீர்மானம் மீது வாக்கெடுப்பினை நடத்தியது.

இதேவேளை, ஈராக்கில் இடைக்கால நிர்வாகத்தினை ஏற்படுத்த அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் அனுமதி வழங்கப் போவதாகவும் ஐ.நா. அறிவித்துள்ளது.

இதற்கு, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளன. இதன் அடிப்படையில் ஈராக்கில் அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப்படைகள் தங்கியிருக்கும் என்றும் ஒருவருடத்தின் பின் நிலைமை மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் ஐ.நா.சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## பெருமை பெறவுள்ள ஜோர்ஜ் பெர்னாண்டஸ்



(புதுடில்லி)

நீர்மூழ்கிக் கப்பலில் கடலுக்கு அடியில் இரவு முழுவதும் தங்கியிருக்க இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி விசாக பட்டினத்தில் உள்ள கடற்படை தலைமையகத்திற்குள் செல்லும் பெர்னாண்டஸ், அத்துறைமுகத்தில் இருந்து ஐ.என்.எஸ்.சிந்துவீர் என்ற நீர்மூழ்கிக் கப்பலில் இரவு முழுவதும் கடலுக்கடியில் தங்கவுள்ளார்.

இதேவேளை, விமானந்தாங்கி போர்க் கப்பல் ஐ.என்.எஸ். விராட் இரவில் நிகழ்த் தும் போர்ப் பயிற்சியையும் அவர் பார்வையிடவுள்ளார்.

இதற்கு முன்னதாக கடற்படையின் ஹோவர்கிராப்ட் படகில் சென்று பாக். நீர்ச்சந்தியில் சேது சமுத்திரத் திட்டப்பணிகளை பார்வையிடத் திட்டமிட்டுள்ளார்.

நீர்மூழ்கிக் கப்பலில் சென்று நீரிற்கடியில் இரவில் தங்கப்போகும் முதல் பாதுகாப்பு அமைச்சர் என்ற பெருமை பெர்னாண்டஸைச் சாராவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## இந்தோ. படைகள் தாக்குதல் 38 ஆச். போராளிகள் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அரசு, ஆஷே மாநிலத்திலுள்ள ஆச் விடுதலை அமைப்பினருக்கு எதிராக ஆரம்பித்துள்ள போரில், இதுவரை அந்த அமைப்பைச் சேர்ந்த 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவச் சட்டம் அமுலானது முதல் தங்களது படைவீரர்கள் ஆச் விடுதலை அமைப்பினரின் முகாம் மீது உக்கிரமான தாக்குதலை நடத்தி வருவதாக இந்தோனேஷிய அரசு தெரிவித்துள்ளது.

மேலும் ஆஷே மாநில கிராமங்களுக்குள் உட்புகுந்த இராணுவத்தினர் அங்குள்ள 8 கிராம வாசிகளைக் கொன்றுள்ளதாக ஆச் விடுதலை அமைப்பினர் கூறியுள்ளனர்.

கிராமவாசிகளை தாங்கள் கொல்லவில்லை என்று இந்தோனேஷிய இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

27 வருட காலமாக சுதந்திரம் கோரி போராடி வரும் ஆச் போராளிகளும் பதில் தாக்குதல்களை நடத்தி வருவதுடன், தாம் இந்தோனேஷியாவுக்கு எதிராக இறுதி வரை போரிடுவோம் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போரை விடுத்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடருமாறு இந்தோனேஷிய அரசையும் ஆச் விடுதலை அமைப்பினரையும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

## புற்று நோய்க்கு ஊசி மருந்து

(கான்பரா)

புற்றுநோய்க்கான ஊசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாக அவுஸ்திரேலிய வைத்தியர்கள் குழு ஒன்று அறிவித்துள்ளது.

இந்த ஊசி மருந்து எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் சர்வதேச சந்தையில் கிடைக்கும் என்றும் இதனை நோயாளி தனது உடம்பில் தானே செலுத்திக் குணமடைய முடியும் என்றும் அக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (உ-2)

## ரேடர் விமானங்களை இந்தியாவுக்கு விற்கலாம்

### இஸ்ரேலுக்கு அமெரிக்கா அனுமதி

(வாஷிங்டன்)

இஸ்ரேலிய ரேடர் விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

வெகு தூரங்களிலுள்ள எதிரிகளின் முக்கிய இலக்குகளில் நடவடிக்கைகளை அறியவும் அவைகளை நோக்கி மிகத் துல்லியமாக ஏவுகணைகளைச் செலுத்தக்கூடியதுமான ‘பல்ஹெம்’ என்ற வகை ரேடர் விமானங்களையே இந்தியாவுக்கு விற்பனை செய்ய இஸ்ரேலுக்கு அமெரிக்கா அனுமதிஅளித்துள்ளது.

இந்திய விமானப்படையின் தாக்குதல் திறனை அதிகரிக்கக் கூடிய இந்த ‘ரேடர் பல்ஹெம்’ விமானங்களை எதிர்வரும் 2005ஆம் ஆண்டுக்குள் இஸ்ரேல் இந்தியாவிற்கு விற்பனை செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தியாவிற்கு விமானங்கள் விற்பனை செய்யக்கூடாது என அமெரிக்கா கடந்த சில காலமாக இஸ்ரேலுக்குத் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இந்திய-நேபாள படையினர் எவரஸ்ற் சிகரத்தை எட்டினர்

(காட்மண்டு)

இந்திய மற்றும் நேபாள நாடுகளின் இராணுவத்தினர் 7 பேரும் நேபாள ஷெர்பா இன மக்கள் 7 பேரும் நேற்று முன்தினம் உலகிலேயே மிக உயரமான எவரஸ்ற் சிகரத்தை எட்டிப்பிடித்தனர்.

எவரஸ்ற் சிகரத்தை முதன் முதலாக ஏறி சாதனை படைத்தவர்கள் டென்சிங் நாக்கே எட்மன்ட் ஹிலாரி ஆகியோராவர். இந்த உலக சாதனையின் 50 ஆவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டியே இவர்கள் எவரஸ்ற் சிகரத்தை அடைந்தனர்.

இவர்கள் 14 பேரும் கடினமான மலைஏறும் முயற்சிக்குப் பின் நேற்று முன்தினம் காலை 6.10 மணியளவில் எவரஸ்ற் சிகரத்தை அடைந்தனர்.

சுமார் இரண்டரை மணிநேரம் அவர்கள் அனைவரும் உலகத்தின் உயரமான சிகரத்தில் உல்லாசமாக பொழுதைக் கழித்தனர்.

இதேவேளை, நேபாள சுற்றுலாத் துறை மேற்பார்வையில் நடைபெற்ற இந்த எவரஸ்ற் சிகரம் ஏறும் பணி வெற்றிகரமாக முடிந்தது என்றும் நேபாள அரச அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தற்போது இந்த 14 பேரும் எவரஸ்ற் சிகரத்தில் இருந்து கீழே இறங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, திபெக் எல்லைப் பக்கமாக இருந்து வந்த சீன மலை ஏறும் குழுவினர் சிலரும் எவரஸ்ற் சிகரத்தை அடைந்திருப்பபதாக தற்போதைய செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

## ஜம்மு-காஷ்மீர் மோதலில் 12 பயங்கரவாதிகள் பலி

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படைகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 12 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

நைகொங் பிரிவு அருகே ஊடுருவ முயன்ற பயங்கரவாதிகள் குழுவை, இராணுவம் இடைமறித்த போது இம்மோதல் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, மற்றுமோர் இடத்தில நிகழ்ந்த மோதலில் 5 பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவர்களில் இருவர் பாகிஸ்தானைச சேர்ந்த ஹிஸ்புல்லா முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்தவர்கள். (உ-9)

## பங்களாதேஷ் அமைச்சரவை இரவோடு இரவாக மாற்றம்

(டாக்கா)

பங்களாதேஷ் பிரதமர் பெ:. ஹூம் காலிதாஷியா தனது அமைச்சரவையை நேற்று முன்தினம் இரவு மாற்றி அமைத்துள்ளார்.

அமைச்சர்கள் 7 பேரை நீக்கிய இவர், 60 பேர் கொண்ட அமைச்சரவையின் எண்ணிக்கையை 53 ஆக குறைத்துள்ளார்.

சர்வதேச நிதியம் மற்றும் உதவி வழங்கும் அமைப்புக்களின் வேண்டுகோளிற்கு அமையவே இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் செலவுகள் அதிகமாக இருப்பதனால் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச அமைப்புக்கள் பங்களாதேஷ் பிரதமரிடம் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## பிரான்ஸ் ஆசிரியர்கள் பொது வேலைநிறுத்தம்

(பரிஸ்)

பிரான்ஸ் ஆசிரியர்கள் நேற்று முன்தினம் பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த வாரத்தில் பிரான்சில் இடம்பெற்ற இரண்டாவது பாரிய வேலைநிறுத்தம் இதுவாகும்.

அரசாங்கத்தின் புதிய திட்டங்களை கண்டித்தும் ஓய்வூதிய மறுசீரமைப்பிற்கும் எதிராகவுமே இந்த வேலைநிறுத்தங்கள் அங்கு இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, எதிர்வரும் 25ஆம் திகதி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவிருப்பதாக பிரான்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

### வடக்குகிழக்கில் இடைக்கால நிர்வாகம்

# புலிகளின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரிக்கவில்லை

## தகவலறிந்த வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

**நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார்கெல் கீஷனுக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, வடக்குகிழக்கு இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உடனடியாக ஏற்பாடு செய்வது சட்டச்சிக்கல்கள் எதிர்நோக்கப்படலாம் என்று அரசாங்கம் நம்புகிறது. ஆனாலும், அரசாங்கம் புலிகளின் கோரிக்கையை நிராகரிக்கவில்லை என்றும் இவ்விடயத்தில் ஒரு சமரச முடிவை எட்டுவதற்கே முயற்சி செய்கிறது என்றும் அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இவேளை வடக்குகிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தும் முகமாக மத்திய ஒருங்கிணைப்புச் செயலகம் ஒன்றை ஏற்படுத்துவதென்ற அரசாங்கத்தின் பிரேரணைகள் போதுமானவை அல்ல என்று காரணம் காட்டி வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு புலிகள் கோரியிருக்கின்றனர்.

இது தொடர்பில் மேற்கொண்டு செயற்படுவதற்கும் மாற்றுப் பிரேரணைகளை முன்வைப்பதற்கும் சமாதான அனுசரணையாளர்களின் அவசரமான தலையீட்டை அரசாங்கம் கோரியுள்ளது.

இதற்கென நோர்வே மற்றும் ஜப்பானிய அனுசரணையாளர்கள் அவசரமாக அழைக்கப்படவுள்ளனர் என்றும அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்விதமிருக்க, அரசியல் யாப்புக்குப் புறம்பான வகையில் வடக்குகிழக்கை கட்டியெழுப்புவதற்கான அதிகாரங்கள் நிறைந்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் விடுதலைப புலிகள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதானது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நிலைகுலை வைத்திருப்பதாக மேற்குல ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும், விடுதலைப்புலிகளை ஆற்றுப்படுத்தும் விதத்திலான முடிவுகளை அவசரமாக எடுக்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தள்ளப்பட்டுள்ளார்.

புலிகளின் கோரிக்கைக்கு சாதகமான பதில் அளிக்க தவறும் இடத்தில் எதிர்வரும் 9,10ஆம் திகதிகளில் ரோக்கியோவில் இடம்பெறுவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் அவர்கள் பங்குகொள்ளப் போவதில்லை.

இதனை நேற்று முன்தினம் சர்வதேசப் பத்திரிகையாளர்களைக் கூட்டி, புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உலகத்திற்கே வெளிப்படுத்தியுள்ளார்.

புலிகள் கலந்துகொள்ளாத ரோககியோ மாநாடு எந்தப்பயனுமற்றது என்பதை ஏற்கனவே வெளியுலக அரசியலாளர்கள் எச்சரிக்கும தொனியில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### தமிழ் - முஸ்லிம் விவகாரங்களுக்கான

## மட்டு. மாவட்ட உப குழு கூட்டம் செவ்வாயன்று

(மட்டக்களப்பு)

தமிழ்-முஸ்லிம் விவகாரங்களைக் கையாளும் மட்டக்களப்பு மாவட்ட புலிகள் -முஸ்லிம் பிரதிநிதிகள் உப குழுவின் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு யுத்த சூனியப் பிரதேசமான வவுணதீவில் உள்ள பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முஸ்லிம்தரப்பு பிரதிநிதிகள் வீடமைப்பு பிரதிஅமைச்சர் பசீர் சேருதாவுத் தலைமையிலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்ட சிறப்பு இராணுவத் தளபதி ரமேஷ் தலைமையிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, படையினர் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள காணிப்பிணக்குகளை, மூனறு உபகுழுக்களை ஏற்படுத்தி ஆராய்வதென கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவொரு உபகுழுக் கூட்டமும் நடைபெறவில்லை என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. (உ-10)

## ஊனமுற்றோர்க்கு புனர்வாழ்வுத்திட்டம்

### 196 பி.செ. பிரிவுகளில் அமுல்

(சுதுமலை)

ஊனமுற்றவர்களுக்காக சமுதாயமட்டத்திலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் 22 மாவட்டங்களில் உள்ள 196 பிரதேச செயலகப பிரிவுகளில் தற்போது-செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஊனமுற்றவர்களின் வாழ்க்கைத் தரததை உயர்த்தி அவர்களை பல்வேறு சமூக நிகழ்ச்சிகளில் பங்குபெறச் செய்வதன் ஊடாக அவர்களுக்கு சம வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க கூடியதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அத்துடன் ஊனமுற்றோரில் 80 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கிராமப்புறங்களில் வசித்து வருவதாகவும், அவர்கள் மிகவும் வறிய நிலையில் காணப்படுவதாகவும் சமூக நலன்புரி அமைச்சு மேற்கொண்ட ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. (உ-252)

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு ஜீ.ரி.சற் நிறுவனம், வடக்குகிழக்கு மாகாண கல்வி, கலாசார அமைச்சு ஆகியவை இணைந்து நடாத்திய "உயர்தர உளவளத்துணையாளர்" பயிற்சியை முடித்த 35 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

ஜீ.ரி.சற் வவுனியா கிளைப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், வடக்குகிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின செயலாளர் ஆர். தியாகலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக உடல்நலத்துறைத் தலைவர் பேராசிரியர் தயாசோமசுந்தரம் எழுதிய "சிறுவர் மனநலம்" என்னும் நூல் வெளியீடும் இடம்பெறும். (உ-3)

### தேசிய இளைஞர் சேவைகள் மன்ற

## யாழ். அலுவலகப் பணிகள் ஸ்தம்பிக்கும் அபாயம்

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடமையாற்றும் நாலவர் சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறவிருப்பதையடுத்து மேற்படி அலுவலகப் பணிகள் ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே பற்றாக்குறையான ஆளணி மற்றும் வளங்களுடன் இவ் அலுவலகம் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்று நீண்ட நாட்களாகியும் இந்நியமனம் எவருக்கும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-59)

### ஓடும் பஸ்ஸினுள் வைத்து

## இளம் பெண்மீது சேஷ்டை புரிந்தவர் இடையில் இறக்கிவிடப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஓடும் பஸ்ஸினுள் வைத்து இளம் யுவதியுடன் சேட்டைபுரிந்த இளைஞன் நடுத்தெருவில் இறக்கி விடப்பட்டார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம நோக்கிவந்து கொண்டிருந்த பஸ்ஸினுள் நின்று கொண்டிருந்த யுவதி மீது அருகில் நின்ற இளைஞன் அங்கசேட்டையில் ஈடுபட்டார்.

தனக்கு ஏற்பட்ட அசௌகரியம பற்றி பிரஸ்தாபப்பெண் அயலில் நின்றவர்களிடம் தெரிவித்ததை அடுத்தே மேற்படி நபர் நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் உள்ள வெட்டவெளிப்பிரதேசத்தில் இறக்கி விடப்பட்டார்.

இதேவேளை, அண்மைக்காலமாக சனநெருக்கடி மிகையாக காணப்படும் பஸ்களில் இப்படியான சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றமை குறிப்பிடததக்கது. (உ-4)

## அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் இந்துக்கல்லூரி அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான மாதிரி விண்ணப்பபடிவத்தினை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம் எனவும், விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஜூன மாதம் 5திகதி முன்னர் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் அறிவித்துள்ளார். (உ-8)

## முதியோர் தொடர்பான ஆய்வு ஆரம்பமானது

(சுதுமலை)

வலி மேற்கு மற்றும் வலி தென்மேற்கு பிரதேச செயலக பகுதிகளில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் தொடர்பான ஆய்வு இவ்வாரம் முதல் இடம்பெற்று வருகின்றது.

வெளக்கள சுகாதார உத்தியோகத்தர்களால் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் ஆகியோரின் பங்களிப்புடன் இவ் ஆய்வு இடம்பெற்றுவருகின்றது.

ஆரோக்கியமான வயது முதிர்வுக்கான வேலைத்திட்ட நடைமுறைக்கு ஏதுவாகவே இவ் ஆயவு மேற்கொள்ளப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-252)

### 43 பாடசாலைகளுக்கு

## தளபாடங்கள் வழங்க நெக்கோட் ஏற்பாடு

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த 43 பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக 180 லட்சம் ரூபா செலவில் "நிக்கோட்" நிறுவனம் மாணவர்களுக்கான தளபாடங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்,கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளுக்கும் அண்மையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தளபாடங்களை வழங்கி வைத்துள்ளார்.

ஏனைய 39 பாடசாலைகளுக்கான தளபாடங்கள் மிக விரைவில் வழங்கப்படுமென நிக்கோட் அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (உ-77)

# அந்தக்காலத்துத் தமிழ் அரசர்களின் அரசியலும், குணாதிசயங்களும் காண்பீர்!

செங்குட்டுவனும் அவன் காலத்துச் சோழ பாண்டியரும் நீதி தவறாதவர்கள். அவர்கள் நீதியைத் தங்கள் உயிரினும் மேலாகக் கருதிவந்தார்கள். நீதிதவறி நடந்ததை உணர்ந்தால உடனே தங்கள் ஆவியை விடுவார்கள் இ்.து அக்காலத்து அரசுகளைப் பிடித்த சீரிய வழக்கமாகும். இதற்குப் பாண்டியனே சாட்சியாவான். பொற்கொல்லன் பேச்சை நம்பி கோவலனைத் தான் கொல்வித்தது தவறு என்பதை அவன் உணர்ந்ததும்,

'பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட
யானோ அரசனயூ யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலங்காவல்
என்முதல் பிழைத்ததயூ கெடுக என்னாயுள்யூ'
-சிலப்பதிகாரம்

என்று கூறி, மயங்கிவீழ்ந்து உயிர் துறந்தான். எனவே பாண்டியன் நீதி முறை வழுவாது அரசியல் நடத்துபவன் என்பது, இச்செய்கையால் தெளிவாகின்றது.

இத்தகைய தமிழ்நாட்டு மன்னர் குடிகளின் நலத்தை தம்நலம் போலக் கருதியும், தமக்கு அடங்கி வாழும் குடிகள் எவவகைத்துயரிற்கும். உள்ளகோமல் கவலையற்று வாழும்படியும் ஆண்டுவந்தனர். குடிகளை வருத்தி நாடாழுவதிலும் கொடுங்கோன்மை வேறில்லை என்பதை தமிழ் அரசர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் தங்களபொறுப்பை நன்றாக உணர்ந்திருந்தார்கள். உதாரணமாக சேரன் செங்குட்டுவன், பத்தினிக் கதையை உரைதத புகழ்ப்பெரும் புலவர் சாந்தனாரை நோக்கி 'புலவீர், பாண்டியன தான் செங் கோலின்றும் வழுவியதையறிந்து, அச்செய்தி எம்மையொத்த அரசர்களுக்கு எட்டுமுன்னரே உயிர்நீத் தான். இது சிறந்த செயலே! இச் செயல வளைந்தஅவன் செங்கோலை நிமிரச்செய்த மாதிரி ஆகும் அரசாயிருப்போருக்கு உரிய காலத்தில் நாட்டில் மழை பெய்யாதாயின் அச்சம்.

கொடுங் கோலுக்கு அஞ்சி மன்னுயிர்களை காத்தற்கு அரசகுடியில பிறந்ததால் துன்பமே அல்லாது இன்பம் என்றும் இல்லை' என்று கூறிவருந்தினான், அரசனது இலட்சணத்தைச் சேரன் எத்துணை உணர்ந்திருநதான என்பதை அவன் வாக்காலேயே அறியலாம்.

### செங்குட்டுவனின் அரசியல் சீர்மை

செஙகுட்டுவன் அரசியல் சரியதென்பது இவனது வரலாற்றை ஒரு முறை வாசிததால்நன்கு உணரலாகும். இம மன்னவன் வடநாட்டு யாத்திரை ஏறக் குறைய முப்பத்திரண்டு மாதங்கள் செயதான் அல்லவா? அக்காலத்தில் சேரநாட்டில் அரசன் எவன்? ஒருவனும இலன். அங்ஙனம் இருந்து, அந் நாட்டில் அமைதியும் அன்பும் குடி கொண்டிருந்தன. மன்னன் வடநாட்டரசை வென்று, வெற்றிமாலையோடு திரும்பி வருகின்றான் என்பதை உணர்ந்ததும் தினைப்புனக்காவல் புரியும் மலைநாட்டுப் பெண்களும், உழவர்களும், கோபாலர்களும், நெய்தல் நிலப்பெண்களும் அடைந்த ஆனந்தம் சொல்லுந்தரமன்று. சேரன் வஞ்சி மாநகரில் புகுந்ததும், அந் நாட்டு மகளிர் அவ்வேந்தனை வரவேற்றதைப பார்த்தால் சேரன் குடிகளின் எத்தகைய நன்மதிப்பைப் பெற்றிருந்தான் என்பது கூறாமலே விளங்கும். அந் நன்மதிப்பு எதனால் ஏற்பட்டது? அரசனது சீரிய ஒழுக்கத்தாலும், செங்கோலினாலுமே அன்றோ?

அவன் பத்தினிக் கல்லைக் கொண்டு வரச்சென்று நெடுங்காலமாகியும், அவன் இல்லாத வேளையில் பிறநாட்டரசர் அவனது நாட்டில் புகுந்து கலகம் விளைத்தனரோ? நாட்டைக் கவர்ந்தனரோ? ஒன்றும் செய்திலர் இதனால் மற்றைய அரசர்கள் அவனிடம் கொண்டிருந்த பேரச்சமும், அவன் பிறஅரசரை அடக்கி ஆண்ட தன்மையும் நன்கு விளங்குகின்றன. அரசன் தன் ஆயுட்காலம் முழுவதும் மறக்கள வேள்வியில் கழித்தான் இதனால் அவன் எத்துனை போர்கள் செய்திருக்க வேணடும்! அத்துனைப்போர்களில் அவன் சேனா வீரர் பின்வாங்கினாரில்லை. அவன போர் என்றால் புறப்படு என்னும் நிலையில் தளரா ஊக்கத்துடன இருந்தனர். காரணம் என்ன? அவர்கள் தங்கள் மன்னர் பெருமானான செங்குட்டுவன் மீது கொண்ட கரைகடந்த அன்பேயாகும். அவ்வன்பு எவ்வாறு அவர்களுக்கு உண்டாயிற்று? சேரன் செங்குட்டுவனின் செங்கோள் வலியாலும், தண்ணளியாலுமே உண்டாயிற்று.

தன்காலத்து விளங்கிய சோழ பாண்டியரை இம்மன்னன் அடக்கிஆண்டு வந்தான் என்பது கயல், புலி, வில் என்ற மூன்றும் வரைந்த, இவனது அடையாள முத்திரையினின்றும் அறியலாகும். சோழனது அடையாளம புலி, பாண்டியனது அடையாளம் கயல், சேரனது அடையாளம் வில். இம்மூன்றையும் சேரன் பெற்றிருந்தான். இம்மன்னவன் கடல் வழியாகவும் பகைவர் வருவதையும் தடுக்கும் பொருட்டு, கப்பற்படையையும் பெற்றிருந்தான்.

### காலக்கணிதன்

முற்கால வழக்கம்போலவே இவனது அவை அமைச்சர், புரோகிதர், சேனைவீரர், தூதுவர், சாரணர்என்ற ஐவகை உத்தியோகத்தர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு ஐம்பெரும் குழு என்று பெயர். இவர்களைத் தவிர வேறுபல உத்தியோகத்தர்களும் இருந்தார்கள். தலைவர்களும் இருந்தார்கள். அமைச்சர்களில் சிறந்தவன் வில லவன் கோதையும், அழும்பில் வேளும் அவாகள் அரசன் ஆணைப்படி நடந்து வந்தாாகள். நம் செங்குட்டுவன் நல்ல கொள்கைகளைக் கொண்டிருந்தான என்பது அவன் போருக்கு புறப்படுமுன், உரயகாலத்தையும், சகுனததையும் கண்டு சென்றதாகக் கூறுவதிலிருந்து தெரிகிறது. போருக்கு புறப்படும் நாள் நல்ல நாளாக அமையாவிட்டால், அதற்குமுன் நல்ல முகூர்ததத்தில் தனது குடையையும் வாளையும், முரசையும் அரண்மனையினின்றும் பெயர்த்து நகரின் புறத்தில் வைத்து விடுதல் அக்காலத்து அரசர் செய்துவந்த பழக்கமென்று செங்குட்டுவன் செய்கையிலிருந்து வெளிப்படுகின்றது. காலக்கணிதன், அரசனின் வெற்றி தோல்விகளுக்கு உரிய காலத்தைக் கண்டறிந்து கூறும் சமர்த்தன். ஆதலால் அவன் செங்குட்டுவன் அரசியலில் உயர்ந்த பதவியில் இருநதான் என்றும் அரசன் அவனிடத்து பெருமதிப்புக் கொண்டிருந்தான் என்றும் அறியலாம்.

செங்குட்டுவன் அரசியலில் ஒற்றர்கள் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். பகைநாடுகளிலும், பிறநாடுகளிலும் நடக்கின்ற அரசாங்கக் காரியங்களையும், பிறவற்றையும் நன்றாக அறிந்து தம் அரசிடம் அவர்கள் கூறுவது வழக்கமாயிருந்தது. அத்தகைய ஒற்றர் அக்காலத்து அரசர் எல்லோரிடமும் இருந்தனர். அவ் வொற்றர்கள ஒவ்வோர் அரசனது தலைமைப் பட்டணத்திலும் இருந்தார்கள் என்று தெரிகிறது. எவ்வாறெனின், செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரைசெய்யப் போவதாகப் பிற அரசர்க்குத் திருமுகம் அனுபபச் சொன்னபோது வில்லவன் கோதை என்னும் மந்திரி, வஞ்சிமா நகரில் பிறநாட்டு ஒற்றர் கள் வதிவதாகவும், நகரில் பறையறைவித்தால் அவ்வொற்றர்கள் அரசன் புறப்படும் செய்தியைத் தங்கள் அரசர்க்கு அறிவிப்பார்கள் என்றும் கூறியதாக் சிலப்பதிகாரம் கூறுகிறது. அவ்வாறே நாட்டில் பறையறை வித்ததும் ஒற்றர் தத்தம் அரசனிடம் சென்று சேரன் யாத்திரையைப் பற்றிக் கூறினர். அதனாலன்றோ பல அரசர் சேரர் பெருமான் யாத்திரை செய்யும் போது அவனைக் கண்டனர். பாண்டியன் திறைப்பொருளை அனுப்பினன். நூற்றுவர், கன்னர், தூதனுப்பினர். இவற்றால் அக்காலத்து ஒற்றர் தமக்கிட்ட வேலையை செவவனே செய்து வந்தனர் என்பது தெரிகிறது. சேர மன்னனும் ஒற்றரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தான்.

### சேரனின் பண்பு

சேனைவீரர் தன்னிடம் கொண்டிருந்த அன்பிற்கு ஏற்ப, சேரனும் அவாகளிடம் அன்புகொண்டு, அவர்கள் இன்பத்திலும், துன்பத்திலும் தானும் கலந்து கொண்டிருந்தான் என்பது , அவன் வடநாட்டுப்போரில் வெற்றி பெற்றதும் தன் வீரர்களுக்குப் பொன் தோடக்கல் பரிசளித்தன்ன என்பதிலிருந்தும், இறந்தவர்களிற்காக இறைவனை தொழுதனன் என்பதிலிருந்தும் அறியப்படும். சேரர்பெருமான் கொலுவீற்றிருக்கையில், அறி வினும், அழகினும் சிறந்த அவன் மனைவி வேண்மாளும் உடனிருப்பது வழக்கம் என்பது தெரிகிறது. அரசன் அவ்வப்போது அரசியின் ஆலோசனையைக் கேட்கும் வழக்க முடையவன் என்பது வீரபத்தினியின் சரித்திரத்தைச் சாத்தனார் உரைத்ததும் அரசன தன்மனைவியை நோக்கி, "உயிருடன் வந்த ஒரு மகள் தன்னிலும், செயிருடன் வந்த இச் சேயிலை தன்னிலும் நன்னுதல்வியக்கும்நலததோர்யா?" (சிலப்பதிகாரம்) என்று வினவினான் என்பதிலிருந்து தெரிகிறது. அரசியின் ஆலோசனை சிறந்ததாய் இருப்பின், அதனைச் செவிசாய்த்துக் கேட்டு, அதன்படி நடக்கும் இயல்பு வாய்ந்தவன் சேரமன்னன் என்பது,

" காதலன் துயரம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானத்து,
அத்திறம் நிற்க நம் அகல் நாடடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும"
(சிலப்பதிகாரம்)

எனறு இளங்கோ வேண்மாள் கூறியபடி, பத்தினிக்கடவுளை பூசித்த செய்கையிலிருந்து தெரிகிறது. அறிவிற் சிறிந்த சில மன்னர்கள் அவ்வக் காலங்களில் தங்கள் ஆருயிர் மனைவியரின் அமுத மொழிகளைக் கேட்டு அவற்றின் படி நடப்பது வழக்கமாய் இருந்தது.

செங்குட்டுவன் காலத்தில் கொண்டாடப்பட்ட விழாக்களில் மிகச் சிறந்தது அவனது பிறந்தநாள் கொண்டாட்டமேயாம் அந்நாள் பெருநாள் என்று வழங்கப்பெறும் அந்நாள் வந்து விட்டால் அநநாட்டு மக்கள் மிக்க மகிழச்சி அடைவார்கள் என்பது செங்குட்டுவன் சரிதையால் விளங்குகின்றது. அன்று சிறையாளர்களை விடுவித்தல், நகரை அலங்கரித்தல், யாவர்க்கும் பெரு விருந்து நடத்தல், மக்கள் மகிழ்ச்சியோடு இருத்தல் முதலியன கொண்டாடப்ப்பட்டன. அரசன் போருக்கு புறப்படுமுன் தன் உத்தியோகத்தர்களுக்கு சோறு போடுதல் வழக்கம். இதனைச் செங்குட்டுவன் செய்து வந்தான். சிறந்த பெரியோர்கள் வந்து அறிவுரை நிகழ்த்தினால், சேரன் தன் நிறைகொண்ட பொன்னை அவர்களுக்குக் கொடுப்பது வழக்கம்.

### எம்மதமும் சம்மதமே

சேரர் பெருமானது நாட்டில் பல திறப்பட்ட தெய்வங்களின் ஆலயங்கள் இருந்தன. அவற்றில் இடையறாது பூசைகள் நிறைவேறிக் கொண்டிருந்தன. சேரப்பெருமான் சைவ மதத்தினராய் இருந்தும் அவன்காலத்தில் சமணசமயமும, புத்தசமயமும், வைணவசமயமும், சைவசமயமும் தளைத தோங்கின. தன்குடிகள் தங்கள் தங்கள் வழக்கப்படி பிரியமான தெய்வஙகளை வழிபடலாம் என்பது அவனது கருத்து. எம்மதமும் சம்மதமே என்ற கொள்கை அவனுக்கு உண்டு. அவனது ஆட்சிக்காலத்தில் வஞ்சி மாநகரில் எல்லா மதத்தினரும் தம்முள் ஒன்று பட்டு ஒன்றுமையோடு வாழ்ந்து வந்தனர். ஆலய வழிபாட் டில் அரசன் அதிக பற்றுடையவன். அவன் அந்தணர்களையும்,

**வித்துவான் மா. இராசமாணிக்கம்**

அறவோர்களையும், துறவிகளையும், புலவர்களையும் பெரிதும் போற்றி ஆதரித்து வந்தான். அவனது அன்பிற்கு உரியவரான புலவர் இருவர் இருந்தனர். அவர்கள் பரணர், சாத்தனார் என்பவர்கள். சாத்தனார் மணிமேகலை என்னும் உயரிய நூலை இயற்றியவர். பரணர் கடைச் சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின் மரில் ஒருவர். பைந்தமிழைப் பாங்குறக் கற்றவர். இப்புலவர் பெருமான் பதிற்றுப் பற்று என்னும் சங்க நூலில செங்குட்டுவனின் வீரச்செயல்களையும் வள்ளற்றன்மையையும் விரித்துப் புகழ்ந்துள்ளார். அதனால், செங்குட்டுவன் மகிழ்ந்து இப்புலவருக்கு நன்கொடை அளித்துத் தன் புதல்வனான குட்டுவன் சேரல் என்பவனையும் கல்வி கற்க இவரிடமே விட்டனன்.

கண்ணை இமை காப்பது போன்று, தன்குடிகளை இச்சேரன் பெருமான் காத்து வந்தனன். இவன் அரசாண்ட சுமார் 35 ஆண்டுகளை குடிகள் துன்பத்தை அறியாது. இன்பத்தையே நுகர்ந்தார்கள். இவன் பக்தியிற் சிறந்தவன் என்பது வீரபத்தினிக்கு ஆலயம் எடுத்து விழாவியற்றியதிலிருந்து அறியலாம். வடநாட்டு யாத்திரைக்குப் புறப்பட்டபோது திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானைத தொழுது, அவரது இணையடித் தூளியைத் தன்முடிமீது வைத்தனன் என்பதிலிருந்து இவன் பக்தி எத்துணைச் சிறந்தது என்பது தெள்ளிதில் விளங்கும். வீரம், அருள், அன்பு, பக்தி, புலமை, அறிவு, பொறுமை, அறிவுரைகேட்டல் ஆகிய நற்குணங்களோடு விளங்கியவன் சேரன் செங்குட்டுவன். இங்ஙனம் தமிழகம் புகழவும், எந்நாட்டாரும் போற்றவும், பெருவாழ்வு வாழ்ந்த சேரர் பெருந்தகை தனது ஐம்பத்தைந்தாவது அல்லது ஐம்பத்தாறாவது ஆண்டில் எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெருமான் கழலடி நிழலைச் சேர்ந்தான். □

---

### நியாப் திட்ட அமுல் பற்றி ஆராய
## உலக வங்கி உயர் மட்டக் குழு அடுத்த மாதம் யாழ்.வரும்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்ட நியாப் திட்டத்தினை மீளவும் அமுல் செய்வது தொடர்பாக உலக வங்கியின் உயர் மட்ட அதிகாரிகள் அடுத்த மாதம்யாழ்ப்பாணம்வரவுளளதாக நியாப் திட்டத்தின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் எஸ்.இராம நாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில்,

நியாப் திட்டத்தைப் பொறுத்த வரை இத்திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏழு மாவட்டங்களிலும் எல்லைப்புற மாவட்டங்களிலும் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக யாழ்ப்பாணத்தில் மட்டுமே இத் திட்டம் அமுல் செய்யப்படவில்லை.

ஏனைய மாவட்டங்களில் இத்திட்டத்தின் பயனாளிகள் நல்ல பங்களிப்புக்களைச் செய்து வருவதன் காரணமாக நாமும் பல முக்கிய அனுபவங்களைப் பெற்று வருகிறோம். யாழ்ப்பாணத்திற்கு உலக வங்கி அதிகாரிகள் வந்ததும் சுமார் 200 கிரா மங்களில் இத்திட்டத்தினை அமுல் செய்யக கூடிய நிலைமை ஏற்படும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ -77)

---

### இரண்டாம் தரமான
## உதிரிப்பாகங்களால் செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு வரும்

(கொழும்பு)

இரண்டாம் தரமான உதிரிப்பாகங்களால் செய்யப்பட்ட வாகனங்கள் இன்னும் இரு மாதங்களில் சந்தைக்கு விடப்படவுள்ளன.

இவ்வாறான தங்களது வாகனங்களை சந்தை விலையிலும் 40வீதம் மலிவாக வாங்கக்கூடிய வாய்ப்பு இலங்கையருக்கு கிடைக்கும் என்று வெஹிக்கிள் லங்கா தனியார் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ஹர்ஷா பி.டி சில்வா தெரிவித்துள்ளார்.

யப்பான் மற்றும் சிங்கப்பூர் அரசின உதவியுடன் 500மில்லியன் ரூபா செலவில் இவற்றின் உற்பத்தி மினுவாங்கொடவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை இவ் உற்பத்தியால் மக்களுக்கும் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படும் என இலங்கை மோட்டார் வாகன சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதனால் பாதிப்புகள்எதுவும் நிகழமாட்டாத வகையில் அதன் உற்பத்தி மேற்பார்வை செய்யப்படுவதாகவும் இவ்வகையான வாகனங்கள் ஏற்கனவே நாட்டில் புழக்கத்தில் உள்ளதாகவும் வெஹிக்கிள் லங்கா நிறுவனப் பணிப்பாளர் அக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

அத்துடன் உதிரிப்பாகங்கள் இரண்டு வருடங்களுக்கும், வாகனம 10வருடங்களுக்கும் பயன்படும் என்று தாம் உத்தரவாதம் அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

---

### பாடசாலைகள் புனரமைப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் யுத்தங்களால் பாதிக்கப்பட்ட இரு பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வர வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகியவையே நிகொட நிறுவனத்தின் உதவியுடன புனரமைக்கப்பட்டு வருகின்றன. (உ-35)

### லூர்துகெவி திறப்புவிழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் புதிதாக அமைக்கப்பட்ட லூாது கெவி திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு அருட்தந்தை யேசுரட்ணம் அடிகளாரின் தலைமையில் இடம் பெறும்.

லூர்துகெவியினை யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் நீக்லஸ் அடிகளார் திறந்துவைத்து திருப் பலியினையும் ஒப்புக்கொடுப்பார்.

பிரான்ஸ் லூட்சிலிருந்து மாதாவின சொரூபம் கொழும்புத்துறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-3,51)

### வாழை அழிவுக்கு பதியலாம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வீசிய மினிசூறாவளி காரணமாக புத்தூர்கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட வாழைச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அழிவு விபரங்களை (செய்கையாளர் பெயர், முகவரி, அழிவுக்குட்பட்ட வாழையடிகளின் எண்ணிக்கை, கிராமசேவை அலுவலர் பிரிவு) இன்று புத்தூர் கமல சேவைநிலையத்தில் விவசாய சம்மேளனம் ஊடாக ஒப்படைக்குமாறு கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (உ)

### சிப்பாய் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கொண்டை வட்டமான் படைமுகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கொண்டை வட்டமான் படைமுகாமைச் சேர்ந்த கே.எம். பெரேரா என்பவரே காயமடைந்தவராவார். கடந்த செவ்வாய்க்கிழமை படைமுகாமில் சக வீரர்களுடன் கதைத்துக கொண்டிருந்த வேளை பின்பக்கமாகத் துப்பாக்கிக் குண்டு துளைத்ததாக வைத்தியசாலைப்பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

### சிறுவர்பூங்கா அமைப்பு துரிதம்

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன் வீதியிலுள்ள மாநகர சபைக்குச் சொந்தமான நூலக வளவில் யாழ்.மாநகர சபையினால் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

முனாள்முதல்வர் எஸ்.கந்தையன மேற்படி சிறுவர் பூங்கா அமைப்பதற்குரிய அடிக்கல்லை நாட்டி இதனை அமைப்பதற்குரிய முயற்சிகளை எடுத்து வந்தபோதும் அவரது பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து இப்பணி இடை நிறுத்தப்பட்டிருநததும் தற்போது மாநகர சபையினரால் இப்பணி துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இன்னும் சில மாதங்களில் இப் பூங்கா திறந்துவைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (உ-7)

### தொண்டர் ஆசிரியர்களை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான மிகமுக்கிய பதிவுகள் எதிர்வரும் 27,28ஆம் திகதிகளில் யாழ்.ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் மு.ப 10மணிமுதல் மேற்கொள்ளப்படவுள்ளன.

சகல தொண்டர் ஆசிரியர்களையும் தொடர்புடைய ஆவணங்களுடன் தவறாது சமுகமளித்து பதிவுகளை மேற் கொள்ளுமாறு யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (உ)

# இந்துசமய, விவகார அலுவல்கள் அமைச்சு

## 2 ஆவது உலக இந்து மாநாடு தொடர்பான விசேட வேலைத்திட்டம் - 2003

2ஆவது உலக இந்து மாநாடு தொடர்பான விசேட வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளின் தேவைகள் மற்றும் குறைபாடுகள் பற்றிய விபரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் திரட்டப்படவுள்ளன.

எனவே, பாடசாலை அதிபர்கள் இவ்விடயம் சம்பந்தமான விண்ணப்பப் படிவத்தினை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு 27.05.2003 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
பிராந்திய அலுவலகம்.
மாவட்டச் செயலகம். யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-222 3644
021-222 5613

## 2 ஆவது உலக இந்து மாநாடு தொடர்பான விசேட வேலைத்திட்டம் - 2003
## பாடசாலைகளின் தேவைகள் மற்றும் குறைபாடுகள் பற்றிய விபரத்திரட்டு மாவட்டம் - யாழ்ப்பாணம்

பிரதேச செயலர் பிரிவு:

உதவி அரசாங்க அதிபர் பிரிவு:

கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும்:

01. (அ) பாடசாலையின் பெயர்:

(ஆ) பாடசாலையின் தரம்:

02. முகவரி:

தொலைபேசி இலக்கம்:

03 பாடசாலை வகை:

கலவன் ஆண்கள் பெண்கள்

04. மாணவர் தொகை:

ஆண்கள் பெண்கள்

05. வகுப்புக்களின்எண்ணிக்கை:

உயர்தர பிரிவு மத்தியபிரிவு கீழ்ப்பிரிவு

06. திருத்தவேண்டிய கட்டிடங்களின் விபரம்:

07. புதிதாக அமைப்பதற்கு உத்தேசித்துள்ள கட்டிடங்களின் விபரம்:

08. விளையாட்டு மைதானம் உள்ளதா? இல்லையெனில் காணி உள்ளதா?

09. பாடசாலையின்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) நூலக வசதி | ஆம் | | இல்லை | |
| (ii) ஆய்வுகூட வசதி | ஆம் | | இல்லை | |
| (iii) மின்சார வசதி | ஆம் | | இல்லை | |
| (iv) தொலைபேசி வசதி | ஆம் | | இல்லை | |
| (v) குடிதண்ணீர் வசதி | ஆம் | | இல்லை | |
| (vi) மலசலகூட வசதிகள் | ஆம் | | இல்லை | |
| (vii) விளையாட்டு உபகரண வசதிகள் | ஆம் | | இல்லை | |
| (viii) பாடசாலை பாண்ட் வாத்திய வசதிகள் | ஆம் | | இல்லை | |

10. கணனி வசதி ஆம் இல்லை

ஆம் எனின் எண்ணிக்கை

11. தளபாட பற்றாக்குறை பற்றிய விபரங்கள்:-

ஆசிரியர்களுக்கான தளபாடங்கள்

மாணவர்களுக்கான் தளபாடங்கள்

12. கடந்த 2 ஆண்டுகளில் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றனவா? ஆம்/இல்லை

ஆம் எனின் நடாத்தப்பட்ட திகதிகள்

13. 2 ஆவது உலக இந்துமாநாடு தொடர்பான நிகழ்வுகள் நடாத்தப்பட்டனவா? ஆம்/இல்லை
ஆம் எனில் விபரத்தை இணைக்கவும்

14. கடந்த 2 வருட காலப்பகுதியில் தென்னிலங்கைக்கான கல்விச்சுற்றுலா மேற்கொள்ளப்பட்டதா? ஆம்/இல்லை

இல்லையெனில் ஏன்?

அதிபர் (பெயர் முத்திரையும் திகதியும்)

வலயக் கல்விப் பணிப்பாளர் (பெயர் முத்திரையும் திகதியும்)

(C/6210)

## பட்டமேற்கல்விக்கு பதியலாம்

(கல்வியங்காடு)

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் 28,29,30ஆம் திகதிகளில் பட்டமேற் கல்விடிப்ளோமா 2003/2004கல்வியாண்டிற்கு விண்ணப்பித்தவர்களைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திறந்த பல்கலைக்கழகத் தலைமைக்காரியாலயத்திலிருந்தும் அதிகாரிகள் வரவுள்ளதால் 2002/2003 கல்வியாண்டிற்குப் பதிவுசெய்து கற்கைநெறியைத் தொடராத மாணவர்களும் தமது பிரச்சினைகள் தொடர்பாக இவ் அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் பிராந்திய நிலைய இயக்குநர் எஸ். ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ-54)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை அரச சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த 16ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் பிரகாரம் சங்கத்தின்புதிய தலைவராக வைத்திய கலாநிதி பொன். சண்முகரத்தினமும் செயலாளராக டாக்டர் க.சிவராசாவும், பொருளாளராக டாக்டர் தி.சிவசுதனும், உபதலைவராக டாக்டர் பரமசிவம் பிள்ளையும் உபசெயலாளராக டாக்டர் சத்தியசீலனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (உ-10)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கைதடி)

காந்தி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று முற்பகல் 8.30 மணிக்கு காந்தி விளையாட்டுக் கழகத்திற்கும சுன்னாகம் ஜனசக்தி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே சிநேகபூர்வ ஒருநாள் மென்பந்து கிரிக்கெட்சுற்றுப்போட்டி இடம்பெறவுள்ளது.

நாவற்குழி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வித்தியாலய அதிபர் வ.மேகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-8)

## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சட்டக்கல்லூரி அனுமதிக்கான நுழைவுத்தேர்வு விண்ணப்பத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க கடந்த மாதம் 30 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்தில் வந்து பார்வையிடலாம்.

(உ)

## அருள்ஒளி வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகையான 'அருள் ஒளி' வைகாசிமாத சிறப்புமலர் அண்மையில் வெளிவந்துள்ளது.

இச்சிறப்புமலர் இரண்டாவது உலக இந்து மாநாடு குறித்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

(உ-10)

## திறந்தவெளி அரங்கு துப்புரவு

(குருநகர்)

நீண்டகாலமாக கவனிப்பாரற்று பற்றை மண்டிக்கிடந்த யாழ். திறந்த வெளி அரங்கு தற்போது துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

முன்னைய காலங்களில் இத்திறந்த வெளியரங்கில் பௌர்ணமிக் கால விழாக்கள், நாட்டுக்கூத்து, நாடக, இலக்கிய விழாக்கள் என்பன இடம்பெற்று வந்தமையும் யாழ். கோட்டைப் பகுதியில் படையினர் நிலைகொண்ட பின்னர் பாவனையற்றுச் சேதமடைந்து போனமையும் குறிப்பிடத்தக்கது. (உ-74)

## இன்று ஒரு தகவல்

# கண்ணாடி தேவையில்லை!

ஒரு நண்பரைத் தேடிக்கொண்டு போனேன். வெகு நாட்களாக அவரைச் சந்திக்காதபடியினால், அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வரலாம் என்று நினைத்துக் கொண்டு போனேன். நான் போகும்பொழுது அவர் வீட்டு வாசலில் தான் நின்று கொண்டிருந்தார். தூரத்திலேயே நான் அவரைப் பார்த்துவிட்டேன். இரண்டு கைகளையும் தூக்கி வணக்கம் என்று சொல்லிக்கொண்டே நெருங்கினேன். அவர் அதை கண்டு கொள்ளவில்லை. அவர் பாட்டில் நின்றுகொண்டிருந்தார். நான் கிட்ட நெருங்கியதும் உற்றுப் பார்த்துவிட்டு "அடே நீங்களா! மன்னிக்கவேண்டும். தூரத்தில் வரும் போது உங்கள் முகம் எனக்குச் சரியாகத் தெரியவில்லை" என்றார்.

இந்த அனுபவம் பலருக்கு ஏற்பட்டிருக்கலாம். இதற்கு என்ன காரணம்? மையோப்பியா அதாவது கிட்டப்பார்வைக் கோளாறு. கிட்டப்பார்வை கோளாறு என்றால் அருகில் உள்ளவைகள் நன்றாகத் தெரியும். தூரத்தில் உள்ள வைகள் நன்றாகத் தெரியாது. ஒரு பொம்மையைப் பார்க்கிறோம். அதில் இருந்து வருகிற ஒளிக்கதிர்கள் நமது கண்கள் வழியாக உள்ளே போகின்றன. கண்ணுக்கு மேல் முன்புறம் உள்ளது விழி வெண்படலம். அதன் வழியாக உள்ளேபோய் அங்கே உள்ள திரையில் விழுகின்றன. அந்தத் திரைக்குப் பெயர் தான் ரெட்டினா விழித்திரை.

பிம்பம் திரையில் சரியாக விழுந்தால் பார்வை நன்றாக இருக்கின்றதென்று அர்த்தம். நாம் பார்ப்பதெல்லாம் பளிச்சென்று தெரியும். கிட்டப்பார்வை கோளாறு உள்ள வர்களுக்கு இந்த பிம்பம் திரையில் விழுவதற்குப் பதிலாக அதற்கு கொஞ்சம் முன்னால் விழுந்துவிடும் அதனால் பார்க்கும் பொருள் தெளிவாகத் தெரியாது. இதை சரிசெய்வதற்கு இதுவரை என்ன பண்ணிக்கொண்டிருந் தோம். கண்ணாடி மாட்டிக்கொள்வோம். இல்லையென்றால் கொண்ராட் லென்ஸ் அதாவது ஒட்டுக்கண்ணாடி வில்லை பொருத்திக் கொள்வோம்.

இப்பொழுது கண்ணாடி தேவையில்லாமலே பார்வையைக் சரிசெய்வதற்கு வசதி வந்திருக்கிறது. அதுதான் - எக்ஸைமர் லேசர் விழிவெண்படல ஒளிக்கதிர் சிதறல் அறுவைச் சிகிச்சை. இது எப்படியென்றால் விழிவெண் படலத்தில் நடுப்பகுதியில் மேல் எழுந்த வாரியான பத்துமுதல் இருபது சதவீதம் வரை தடிமனை நீக்கிவிடு கிறது. இன்னொரு முறை - எப்படியொன்றால் அது விழிவெண்படல ஆர அறுவை சிகிச்சை. விழிவெண்படலத்தின் தடிமனான மேற்பகுதியை 95 முதல் 99 சதவீதம் வரை 4 முதல் 8 ஆரங்களாக வெட்டிச் செதுக்கி நடுப்பகுதியை சமப் படுத்துகின்ற அறுவை சிகிச்சைஇது.

ஒளிக்கதிர் சிதறல் அறுவைச் சிகிச்சை இருக்கிறது பாருங்கள். ஒரு பதினைந்து நிமிடத்தில் அது முடிந்து விடும். ஆஸ்பத்திரியில் நாம் தங்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அன்றைக்கே வீட்டுக்குப் போய்விடலாம். நமக்கு அறுவைசிகிச்சை நடக்கும் பொழுது, நாம் விழித்துக்கொண்டே இருக்கலாம். வலி இருக்காது. கண்ணுக்கு மட்டும் தற்காலிகமாக மரத்துப் போவதற்கு மருந்து கொடுத்துவிடுவார்கள்.

லேசர்க் கருவியை மேல் நோக்கி பார்க்கிற மாதிரி படுத்துக் கொள்ள வேண்டும். டாக்டர் நமக்குத் தேவையான ஒளி விலகல் திருத்தத்தை லேசர்க் கருவியின் கம்யூட்டரில் பதிவு பண்ணிவிடுவார். கண் இமைக்காமல் இருப்பதற்கு ஸ்பகுலம் என்கின்ற கிளிப்பை பொருத்திவிடுவர். அதன் பின்னர் மிகவும் இலகுவாக விழிவெண்படலத்தின் மேல் இழை திசுக்களை நீக்கி விடுவார். பின்னர் கண்ணுக்கு ஒரு கட்டு. அவ்வளவுதான் வேலை. பிறகு வீட்டிற்கு வந்து விடலாம். இது தான் PRK சிகிச்சை. அதாவது கதிர் சிதறல் அறுவைச் சிகிச்சை .

விஞ்ஞானம் வளர்கிற வேகத்தைப் பார்த்தீர்களா? இனிமேல் ஆபரேஷனுக்கும் கத்திக்கும் சம்பந்தமே இல்லை. அதனால் அறுவைச் சிகிச்சை என்பதற்கே வேறு வார்த் தையை கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் சிகிச்சையில் அறுவையே இல்லையே. கத்தியின்றி, இரத்தமின்றி சுதந்திரம் என்பது மாதிரி, கத்திஇன்றி, இரத்தமின்றி ஆபரேஷன்.

அதனால் இனிமேல் ஆபரேஷன் என்றால் யாரும் பயப்படவேண்டாம். ஒரு நோயாளி அப்படித்தான் ஆஸ்பத் திரியில் இருந்து தப்பித்து வெளியில் ஓடிவந்தான். வாயிலில் இருந்தவர் "ஏன் ஐயா இப்படி பயந்து கொண்டு ஓடிவரு கிறாய்?" என்று கேட்டார். எனக்கு இன்று ஆபரேஷன்! அது தான் பயந்து கொண்டு ஓடி வருகிறேன்" என்றான் அந்த ஆள்! "அதில் என் பயம்? இப்பொழுது அவை சுலபம்" என்றார் இவர்

"நான் ஆபரேஷனுக்குப் பயப்படாமல் துணிவுடன் தான் இருந்தேன். நர்ஷ் அம்மா சொன்னதைக் கேட்டதும்தான் பயம் வந்துவிட்டது" என்றான் அவன். "நார்ஸ் அம்மா என்ன சொன்னார் என்று கேட்டார். "இது ஒரு சிறிய ஆபரேஷன் தான் பயப்படதீர்கள். தைரியமா இருங்கள்" என்று சொன்னார் என்றான். "அப்படி சொன்னதன் பின்பும் உனக்கு என்ன பயம்?" என்றார். "ஐயோ! அந்த நர்ஸ் அம்மா அப்படிச் சொன்னது என்னிடமில்லை ஐயா! ஆபரேஷன் செய்யப்போகிற டாக்டரிடம்" என்று சொன்னான் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வட -கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை

## தே. ஐ. கட்சி பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்ட சமாதான முயற்சிகள் மற்றும் ரோக்கியோ மாநாடு ஆகியவற்றில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலந்து கொள்வதறகான வாய்ப்பை ஏற்படுத்தும பொருட்டு, வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத் துமாறு பிரதமர் ரணில்விக்கிரம சிங்க தலைமையிலான அரசாங் கத்திடம் தேசிய ஜனநாயக்கட்சி யின் செயலாளர் நாயகமும், மததிய மாகாண சபை உறுப்பினரமான எஸ்.ஏ. கந்தசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட் டுள்ள அறிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டால், அதனை சிங்கள மக்கள் உட்பட அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொண்டு, அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ் இடைக்காலநிர்வாக சபையை பெரும்பாலான நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் வரவேற்றுள்ளது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் நட வடிக்கைகளினால் சமாதான முயற்சிகள் சீர்குலையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதோடு, தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆயுத பலத்தை உறுதிசெய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட் டுளளனர் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# சமாதான கூட்டு முயற்சிக்கான உபாயங்களை ஆராயும் மக்கள் அரங்கு

## யாழ். பல்கலையில் இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத் தின் ஏற்பாட்டில் "பாதுகாப்பு - சமாதான கூட்டுமுயற்சிக்கான உபயங்களை ஆராயும் மக்கள் அரங்கு" இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழ புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்ப மாகும் இம்மக்கள் அரங்கு இரு தினங்களும் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

தென்னிலங்கையில் பிரபல்யம மிக்க அரசியல் பொருளாதார நிபுணர்களான வாசுதேவ நாணயக் கார, பெண்கள் அபிவிருத்தி நிலையச செயலாளரும் மோர்ச் அமைப்பின தலைவருமான திருமதி நிமால்க்கா பெனார்ண்டோ, கலாநிதி தாரிணீ இராஜசிங்கம் சேனாநாயக்க சமாதான சபைத்தலைவர் எஸ். பாலகிஷணர் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் இதில் கலந்து கொள்ள வுள்ளனர்.

இந்நிகழ்வை, யாழ். பல்கலைக கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட பொறுப் பாளர் இளம்பரிதி ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

அத்துடன், திருமதி சாந்தி விக்னராஜா, யாழ்மாவட்ட நீதிபதி ஆர்.பி. விக்னராஜா, திருமதி கோகிலாமகேந்திரன், யாழ்.பல்கலைக கழக பொறியியற்றுறைத்தலை வர் ஆர். சிவநாதன் ஆகியோர் இம்மக்கள் அரங்கை தலைமை தாங்கி நடாத்தவுள்ளனர்.

இம்மக்கள் கருத்தரங்கில் சமகால அரசியல் பொருளாதார நிலைமைகள் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளதால் ஆர்வலர் கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (உ-8)

# புலிகளின் நிலைப்பாட்டில் நல்ல மாற்றம் ஏற்படும்

## அமெ.காங்கிரஸ் சபை உறுப்பினர் நம்பிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தை களிலும், டோக்கியோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டததிலும தமிழழ விடுதலைப் புலிகள் கலந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டிருப்பதாக அமெரிக் கக் காங்கிரஸ் சபை உறுப்பினர் கிரான் போலன் ஜுனியர் தெரிவித் துள்ளார்.

அமெரிக்கர் பிரதிநிதிகள் சபையில் ஆற்றிய விசேட உரையில் அவர் இதைத் தெரிவித் தாக அமெரிக்காவுக்கான இலங்கைத தூதரம் விடுத்துள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

இலங்கையின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினைக் காணவும், தமிழீழ விடுதலைப்புலிகளால் தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவரும் சமா தானச் சூழ்நிலையை முழுமையாக பயன்படுத்துவார் என நாம் எதிர் பார்க்கிறேன்.

இலங்கையின் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதில் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் தீவிர அக்கறை கொண் டுள்ளன.

கடந்த 20 வருடகால யுத்தத் தை தவிர்த்து நாட்டில் நிரந்த சமாதானமும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட இருதரப் பினரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

(தி)

## இராசி பலன்

24.05.2003

**(வைகாசி10, சனி)**

**நவமி ந.இ. 12.01வரை**
**சதயம் மு.ப. 10.09வரை**
**இராகுகாலம் 8.52 - 10.22**
**சுபநேரம் 2.52 -4.22**

**மேடம்**
கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி, காரியஅனுகூலம், அதிக வருமானம்.

**இடபம்**
நல்ல செய்தி, பிறர் உதவி, முயற்சி கைகூடும், நிலைமாற்றம்.

**மிதுனம்**
கட்டுப்பாடு, ரோகம், போசன சுகம், முயற்சிதாமதம்.

**கடகம்**
வாகனபயம், உறவினர் வெறுப்பு, காரியதடங்கல், கௌரவக்குறைவு.

**சிங்கம்**
நினைத்த காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், தேகநலன், பாராட்டு.

**கன்னி**
தொழில் விருத்தி, சுவாராஸ்யம், எடுத்தகாரியம் கைகூடும், உடல் நலம்.

**துலாம்**
வியாபாரவிருத்தி, கௌரவக்குறைவு, குடும்பக்கவலை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
உடல்நலக்குறைவு, மாதாவழி உறவு, காரியதாமதம், தர்மம்.

**தனுசு**
கூட்டு முயற்சி, பொருள்சேர்க்கை, பிரயாண நன்மை, சகோதரர் உதவி.

**மகரம்**
நிலைக்கேடு, அதிக செலவு, காரியதாமதம், அதிகவார்த்தை

**கும்பம்**
சயனசுகம், போசன நன்மை, உறவினர் வருகை, தேகநலன்,

**மீனம்**
காரிய அலைச்சல், சுபசெலவு, வாக்குசித்தி, திடீர் நன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

# பனை அபிவிருத்திச் சபைக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை

## தலைவர் கவலை தெரிவிப்பு

(தென்மராட்சி)

பனை அபிவிருத்திச் சபை யாழ். மாவட்டத்தில் உள்ள ஊர்கா வறறுறை, காரைநகர், சிங்கைநகர், வரணி ஆகிய நான்கு இடங்களில பனை வெல்லம், கல்லாக்காரம் மற்றும் பனம்பாணி போன்றவற் றினை தற்போது உற்பத்தி செய்து வருகின்றது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மேற்படி பொருட்களை தென்இலங் கையில இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அத்துடன், ஒவ்வொரு வாரமும் கணிசமான உற்பத்தி பொருள்கள் கொழும்பில் உள்ள சபையின் விற்பனை நிலையத் திற்கு அனுப்பப்படுவதாக சபை யின் தலைவர் பொ. சிவபாதம் தெரிவித்தார்.

இதேவேளை, பனை அபிவிருத் திச் சபைக்கு அரசிடமிருந்து போதிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை காரணமாக புதிய திட்டங்களை அமுலாக்க முடியாத நிலை காணப்படுவதா கவும், பனை அபிவிருத்திச் சபை யின் செயற்பாடுகளை அதிகரிக்க நிதி ஒதுக்கீடு செய்து தரும் வண்ணம் சபையின் தலைவர் விரைவில் பிரதமரையும், அமைச்சர் மகேஸ்வரனையும் கோரவுள்ளதா கவும் தெரியவருகின்றது. (உ-77)

## பிரிவுபசார விழா

(கொய்யாத்தோட்டம்)

தீவக்கல்வி வலய பணிமனை யின் பணிப்பாளராகக் கடமை யாற்றி, யாழ். வலயப பணிமனைக கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ப. விக்னேஸ்வரன் மற்றும் தீவகவலய பணிமனை யின் புதிய பணிப்பாளர் வ. வேணுகோபால் ஆகியோர்க்கான பிரிவுபசார மற்றும் வரவேற்பு விழா இன்று மாலை 9.30 மணிக்கு யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம. வித்தியால யத்தில் வித்தியாலய அதிபர் பொ. அருணகிரிநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது. (உ-53)

கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை
-குறள்-

## வலம்புரி

### யார் செய்தால் நியாயம்?

அரசியல் யாப்புக்கு அப்பால் இடைக்கால நிர்வாகத்தை கையளிக்குமாறு விடுதலைப் புலிகள் கோரியிருப்பதை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஒருபோதும் ஏற்கக் கூடாது. இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்கள் தமது அரசியல், இராணுவ நிலைப்பாட்டை வலுப்படுத்திக் கொள்வர். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும் போது அவர்களிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைத்தால் அது பரிகாசத்திற்குரியது என்றும் சரத் அமுனுகம கருத்துக் கூறியுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவெனில், பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது குறிப்பிட்ட காலத்திற்கு விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்கத் தயாராக இருந்தார். இது விடயம் சரத் அமுனுகமவிற்குத தெரியாமல் போனமை வேதனைக்குரியது.

எதிர்க் கட்சி என்பது, எதிர்க்கும் கட்சியாக இருக்க வேண்டுமே தவிர, எதிரிகள் கட்சியாக இருக்கக் கூடாது. தமது கட்சி ஆட்சியில் இருந்தபோது இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது சரியானதாக இருப்பின் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை விடுதலைப் புலிகளிடம் வழங்குவதில் எந்தத் தவறும் இருக்க நியாயம் இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த 20 வருடங்களாக யுத்தத்தின் பாதிப்புகள் உச்சம் கண்டுள்ளது. இன, மத வேறுபாடின்றி, உயிரழிவுகளும், சொத்தழிவுகளும் தாராளமாக ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் யுத்தம் நடக்குமாயின் நாடு எவ்வகையிலும் தாங்கிக் கொள்ளமுடியாது.

யுத்தத்தின் வடுக்களால் எத்தனையோ குடும்பங்கள் கண்ணீருடன் வாழ்க்கை நடத்துகின்றன. இதனை இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் உணர்வு பூர்வமாக சிந்திக்க வேண்டும். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற பேதமை களைந்து இந்த நாட்டில் யுத்தம் நின்று சமாதானம் ஏற்பட்டு மக்கள் வாழ்வில் நிம்மதி ஏற்படப் பாடுபட வேண்டும். சமாதானச் சூழல் ஏற்படும் போதெல்லாம் பேரினவாதம் பேசினால் முடிபு அழிவாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்ட சமாதானப் பேச்சு இந் நாட்டில் தமிழ் மக்களும் சம உரிமை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு அல்ல, அத்தகையதொரு சிந்தனை சிங்கள ஆட்சியாளர்களிடம் ஏற்பட்டிருக்குமாயின், தந்தை செல்வநாயகத்துடனேயே பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும். ஆக, இப்போது புலிகளின் இராணுவ பலமே அரசை பேச்சுக்கு வரச் செய்துள்ளது. இதனைப் பேரினவாதிகள் மறந்துவிடலாகது.

# யாழ்.குடாநாட்டிலுள்ள குளங்கள் குப்பைகொட்டும்இடங்களாகிவருகின்றன

## முன்னாள் துணைவேந்தர் கவலை



(தென்மராட்சி)

எமது பிரதேசத்துக் குளங்கள் நல்லமுறையில் புனருத்தாரணம் செய்யப்படுமானால் அது நீர்ப்பாசனத்திற்கு மட்டுமல்ல மக்களுடைய குடியிருப்பக்குத் தேவையான நீர், சுற்றுச் சூழலைமேம்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரும் தரைமேல் நீரைப் பொறுத்தவரை அது யுத்த தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதனை நாம் முக்கியமாக சீர்செய்ய வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம பிள்ளை யாழ். அரச செயலகத்தில் கடந்த வியாழன் அன்று நடை பெற்ற நியாப் திட்டம் அமுலாக்கல் பற்றிய ஆய்வுப்பட்டறையில் உரை யாற்றும் போது தெரிவித்தார்.

பேராசிரியர் இ.நந்தகுமாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப் பட்டறையில் பேராசிரியர் பாலசுந்தரம பிள்ளை தொடர்ந்தும் உரையாற்றும் போது,

இலங்கையிலே மிகவும் வித்தியாசமாக நிலஅமைப்பைக் கொண்டது யாழ்ப்பாண மாவட்டம்.

இந்தப் பிரதேசத்தினுடைய வாழ்வும் வளமும் மிகச் செறிவான நிலப் பயன்பாடு சிக்கலான நிலப்பயன்பாடு யாவும் நீரையே அடிப்படையாகக் கொண்டது. இந்த மாவட்டம் மிகவும் அற்புதமான மாவட்டம். இங்கு யாதொரு இயற்கை அனர்த்தங்களும் வருவதில்லை. இயற்கை அனர்த்தங்களோ கடற்பெருக்கோ, பெரும் வெள்ளமோ, பெரும் சூறாவளியோ, எரிமலையோ, நிலநடுக்கமோ, நிலச்சரிவோ யாதும் கிடையாது. பெரும் புயல்வந்து 50வருடங்களாகிவிட்டன.

எங்களுடைய பிரதேசத்தில் கடந்த 20வருடங்களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக, மக்கள் தொகை 10லட்சத்தில் இருந்து 5லட்சத்துக்கு வந்துள்ளது. உண்மையில் கலவரங்கள், சண்டைகள் இல்லா விட்டால் இன்று எமது மாவட்டத்தில் இருக்கக் கூடிய மக்கள் தொகை 10லட்சமாகும் காலி மாவட்டத்தில் 2001ஆம் ஆண்டில் 10லட்சம் மக்கள் வாழ்ந்தனர். நாங்கள் காலி மாவட்டத்திலும் பார்க்க எப்போதும் கூடிய மக்கள் தொகையைக் கொண்டவர்கள்.

எனவே, மக்கள் தொகை அரைவாசியாகப் போனதும் எமகது மறைமுகமாகக் கிடைத்த ஆசீர்வாத மாகும. இத்தகைய நிகழ்வுகளால் இரண்டு நன்மைகள் கிடைத்துள் ளன. ஒன்று மக்கள் தொகை குறைந்தது. மற்றையது பல பிரதே சங்கள் பயிர் செய்யாமல் கைவிடப் பட்டதாகும்.

கடந்த 20வருடகாலமாக கட்டுமானங்கள் பராமரிப்பு இல்லாமல் பழுதாகிப் போய்விட்டன. எங்களுடைய குளங்கள் தென்னிலங்கையில் இக்கின்ற குளங்கள் மாதிரி நீராடு கின்ற குளங்கள் அல்ல. எமது குளங்கள் குப்பைகள் கொட்டும் குளங்களாகத்தான் இன்றைக்கு மாறி இருக்கின்றன.

நாம் எப்போதும் பழையவை பற்றியே யோசிக்கக் கூடாது. புதிய சிந்தனைகளுடன் செயற்பட வேண்டும் எமது பிரதேசத்தை சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குக்குரிய இடமாக மாற்ற வேண்டும். எமது குளங்கள் இன்று நல்ல நிலையில் இல்லை. சேறுகள், குப்பைகள் மற்றும் பொலித்தீன் போன்றவற்றினால் நிரம்பியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நீர் இல்லாமல் போய்விடும் எனப்பலபேர் சொல்கிறார்கள். ஆனால் நாம் எமது நீரில் 10சதவீதத்தினைக் கூடப் பயன்படுத்துவதில்லை. எனவே அதைப்பற்றி யாருமே கவ லைப்படக் கூடாது எனக் கூறினார்.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் அங்கு கருத்துரை வழங்கும்போது,

யாழ் மாவட்டத்திலுள்ள மக்கள் மிகவும் கடுமையான உழைப்பாளிகள் கடந்த வருடங்களில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்கள், அவர்களது பொருளாதார சமூ வாழ் வைப் பெரிதும் பாதித்துள்ளது. நியாப் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக வலுவூட்டல் பணிகள் மூலம் பாதிப்படைந்த எமது மக்களுக்கு வேண்டிய ஊக்கம், உற்சாகம் போன்றவற்றினை வழங்கி தற்காப்புடையவர்களாகவும், தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும் ஆக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இவ் ஆய்வுப்பட்டறையில் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் காலத்தில் அமுல் செய்யப்படவுள்ள நியாப் திட்டம் பற்றிய சிபார்சுகளை பங்குபற்றுனர்கள், குழுநிலைகளில் வழங்கியிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

### குண்டுமழையில் குளித்த நாம்

# மழையால் பாதிப்புற்ற தென்னிலங்கை சோதரர்க்கு உதவு வது பெருமைக்குரிய விடயம்

## புலிகளின் அரசியல் பிரமுகர் அன்பரசன் பெருமிதம்

(கொழும்பு)

குண்டு மழையில்குளித்து பல இழப்புக்களையும், துன்பங்களையும் சந்தித்த நாம் தென்னிலங்கையில் இயற்கை மழையினால் பாதிக்கப்பட்ட சகோதரர்களுக்கு உதவத் துடிப்பது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் அன்பரசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தென்னிலங்கை மக்களுக்கு உதவும் பொருட்டு நிராவணப்பொருட்களை பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரனிடம் கையளித்த பின்பு இது பற்றி வெளி நாட்டு செய்திஊடகம் ஒன்றிற்கு கருத்து வெளியிடுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எமது மக்கள் தாம் அடைந்த துன்பங்களையும் துயரங்களையும் போன்று மற்றவர்களும் அடையக் கூடாது என்ற மனப்பான்மை உடையவர்கள்.

அதனாலேயே இத்தகைய மனிதாபிமான உதவியை நாம் எமது மக்களிடம் கோரியபோது, அவர்கள் மனஞ்சலிக்காது பொருடகளையும் நிதிகளையும் தந்துதவியுள்ளார்கள்.

கடந்தகால யுத்தங்களின் போது எமது மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லால் வர்ணிக்க முடியாதவை போரினால் மட்டுமன்றி, பொருளாரத் தடையினாலும் எமது மக்களை முன்னைய அரசுகள் துன்பப்படுத்தின.

முக்கியமாக மருந்துத் தடை உணவுத்தடை, எரிபொருள் தடை, என்பனவற்றால் எமது மக்கள் பெரும் அல்லற்பட்டார்கள்.

இவ்வாறு சொல்லணாத் துன்பங்களை அனுபவித்து வந்த எமது மக்கள், தென்னிலங்கையில் ஏற்பட்ட உயிர், உடைமை சேதங்களை அறிந்தவுடன் எமது தலைவரின் கோரிக்கைக்கு அமைய நாங்கள் வாகனங்களுடன் பொருட்களை சேகரிக்க சென்ற போது தம்மால் முடிந்த அளவு உதவிகளை செய்ய முன்வந்தனர்.

அத்துடன் தென்னிலங்கை வாழ் மக்களுக்கு எத்தகைய உதவிகள் தேவைப்படுகின்றதோ அவற்றையெலலாம் செய்ய எமது மக்கள் இன்னும் தயாராக இருக்கிறார்கள்.

இவர்கள் இவ்வாறு உதவுவதற்குக் காரணம் இதுவரைகாலமும் அவர்களும் இத்தகைய இழப்புக்களையும் துன்பங்களையும் அனுபவ ரீதியாகக் கண்டுணர்ந்தவர்கள் என்பதே.

மேலும் இம் மக்களுக்கு உதவ வடக்கு - கிழக்கில் உள்ள பல அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

ஆனால் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்காமையினால் தமது பணியை அவர்கள் தற்போது கைவிட்டுள்ளனர் என்றார். (உ-10)

### துர்நாற்றம்

(குருநகர்)

குருநகர்ப் பகுதியில் உள்ள வடிகால்கள் ஒழுங்காகத் துப்புரவு செய்யப்படாமையால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இவ்வடிகால்களில் குவியும் குப்பை கூழங்கள் நீரோட்டத்தைத் தடுப்பதால் தேங்கி நிற்கும் கழிவு நீரில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன் நோய்க்கிருமிகளும் பரவும் அபாயம் தோன்றியுள்ளது. (உ-74)

### தினசரி தியானம்

### உங்களிடமே உண்மையாயிருங்கள்

நாம் அறிவாளிகள். நாம் எல்லாம் அறிந்தவர்கள் என்று எண்ண வேண்டாம். என் நண்பனே! நீ ஏமாற்றப்படுகிறாய். பரந்த கடலளவு சுவைக்கவேண்டியிருக்கிறது. இதில் ஒரு துளிகூட நீ சுவைக்கவில்லை. உன் ஒவ்வொரு மூச்சும் பொய்யை நோக்கிப் பாய்கிறது. பொய்மைச் சேற்றில் வாழ்கிறாய். 'உண்மையே வெல்லும்' எனத் திரும்பத்திரும்பச் சொல். உண்மையை ஏமாற்ற முடியுமா? ஆகவே உங்களிடமே உண்மையாய் இருங்கள்.

சுவாமி சிவானந்தர்

### விளையாட்டுப் போட்டி

(அளவெட்டி)

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டி நேற்று ஆரம்பித்து தொடர்ச்சியாக 4 தினங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கும், திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பி.ப. 1.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை வீரர்களை உரிய நேரத்துக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-83)

### சுவிஸ், ஆஸி.நாடுகளும்

# தென்னிலங்கையர்க்கு மனிதாபிமான உதவி

(கொழும்பு)

தென்னிலங்கையில இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுவிற்சர்லாந்து அரசு 80 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் அவுஸ்திரேலிய அரசு 65 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் வழங்கியுள்ளன.

இதேவேளை, இவ் வெள்ள நிவாரணத் திட்டத்திற்கென நோர்வே 9 கோடி 50 லட்சம் ரூபா நிதியினையும், ஜப்பான் 1 கோடி 60 லட்சம் ரூபாவினையும் நெதர்லாந்து 70 லட்சம் ரூபாவினையும் அமெரிக்கா 50 ஆயிரம் அமெரிக்க டொலரையும், கனடா 100 ஆயிரம் அமெரிக்க டொலரையும் வழங்கியுள்ளதுடன், இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகள் மனிதாபிமான அடிப்படை யில் நிவாரண உதவிகளை வழங்கியுள் ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தாய்லாந்து கடற்படை தளபதி நேற்று இலங்கை வருகை

(கொழும்பு)

தாய்லாந்து கடற்படைத்தளபதி நேற்று இலங்கை வந்தடைந்தார்.

இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் படைத்தரப்பு தளபதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாடுகளிற்கும் இடையிலான இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கிலேயே இவரது இலங்கை விஜயம்அமைந்துள்ளது.

இவரை இலங்கைக் கடற்படை தளபதி தயாசந்தகிரியும், தாய்லாந்தின் இலங்கைத் தூதுவரும் வரவேற்று அழைத்து வந்தனர்.

இதேவேளை, இவர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களிற்கு நேரில் சென்று நிலைமைகளைக் கண்டறிந்து தாய்லாந்து அரசிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. நிக்ரோல் லிமஸ்றி 3 நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

இவரும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உள்ளிட்ட படை அதிகாரிகள் பலரைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

# யாழ்.மக்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி டோக்கியோ மாநாட்டில் புலிகளை பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்!

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி கோரிக்கை

(தென்மராட்சி)

டோககியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்தையும்,தமிழீழ விடுதலைப் புலிகளையும் பங்பற்றச் செய்யும் முயற்சியில் ஐரோப்பிய யூனியனும், சர்வதேச சமூகமும் மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயற்பட்டு வருகின்றன.இது விடயத்தில் நாம் எப்பக்கமும் சாராது நடுநிலையாக நின்றே செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான பிரதிநிதி வூட்டர் வில்ரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த இவர்,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,யாழ். போதனா வைத்தியசாலை,யாழ். மாவட்ட அரச செயலகம்,வர்த்தக சமூகம்,யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலையம் போன்றவற்றிற்கு விஜயம் செய்து, அங்குள்ள முக்கிய அதிகாரிகள் மற்றும் பிரமுகர்களிடம் யாழ்ப்பாணத்து நிலைமைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்றுப் பிற்பகல் இணையத் தலைவர் டாக்டர் வை.தியாகராசா தலைமையில் இடம் பெற்ற சந்திப்பின் போது வூட்டர் வில்ரன் மேலும் குறிப்பிடுகையில்;

கடந்த இருபது வருடகாலமாக இலங்கையில் மிக விஷேடமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் அனுபவித்து வந்த துன்பங்கள் வேதனைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி ஐரோப்பிய யூனியன் நன்கு அறிந்துள்ளது.நாம் தொடர்ந்தும் கடந்த கால அநியாயங்கள், கஷ்டங்கள் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.கடந்த காலம் கடந்த காலமாகவே இருக்கட்டும்.போனவை போகட்டும் இனி மேல் நடக்க வேண்டியவை பற்றியே நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

யப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் இரு நாள் கூட்டம் யப்பான்,நோர்வே, அமெரிக்கா,ஐரோப்பிய யூனியன் ஆகிய நான்கு தரப்பின் இணையத் தலைமையில் தான் நடைபெறவுள்ளது.ஐரோப்பிய யூனியனில் மொத்தமாக 15 நாடுகள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன.எமது நாட்டு மக்களிடம் திரட்டப்படும் வரிப் பணத்திலேயே இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் உதவிகளை வழங்குகின்றோம்.

ஆதலால் வழங்கப்படும் நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படும என்பதை நாம் உறுதிப்படுத்துவோம்.ஆதலால் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் நிதி வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு விடும் என்ற அச்சத்தினை யாரும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.இலங்கையில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும். மக்கள இயல்பு வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதிலேயே நாம் உண்மையான கரிசனை கொண்டுள்ளோம்.

எனவே யாழ்ப்பாணத்து மக்கள் தமது செல்வாக்கினைப் பிரயோகித்து டோக்கியோ மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை பங்கு பற்றச் செய்ய வேண்டும் என சர்வதேச சமூகமும் ஐரோப்பிய யூனியனும் விரும்புகிறது என வூட்டர் வில்ரன் குறிப்பிட்டார்.

இதேவேளை,புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியதன் பின்னர் யாழ்ப்பாணத்து நிலைமைகள் மக்களின் நிலைப்பாடுகள் அதிஉயர் பாதுகாப்பு வலயம் இடம் பெயர்ந்தோர் பிரச்சினைகள் விவசாயிகள் பிரச்சினைகள் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் பற்றியும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி மிகவும் ஆர்வமாகக் கேட்டறிந்து கொண்டார்.

இவர் தனது இரு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்புகின்றார். (இ-77)

## கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

''ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புக்கள்'' எனும் கவிஞர் கருணாகரனின் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பில் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பொன் தியாகம் திருமதி தில்லைநாயகம் ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றிவைப்பர். நூலை வே. பாலகுமாரன் வெளியிட்டு வைக்க, நிலாந்தன் வெளியீட்டு உரையை நிகழ்த்துவார் கவிஞர் இ. முருகையன் முல்லைக் கோணேஸ் ஆகியோர் நூலுக்கு ஆய்வுரை நிகழ்த்துவர். (இ)

## படைவீரரை காணவில்லை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள படைமுகாம் ஒன்றிலிருந்து படை வீரர் ஒருவர் துப்பாக்கியுடன் காணாமல் போயுள்ளாரென்று படைத்தரப்பினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜீ.எம்.கே ரட்ணாயக்கா என்ற படை வீரரே இவ்வாறு காணாமல் போனவராவர்.

இவர் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கடமையின் போது காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது. (த-7-77)

## மாலைதீவில் கைதான மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

மாலைதீவு கடற்படையினரால் கைது செய்யபபட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்த 14 இலங்கை மீனவர்கள் மாலைதீவு அரசாங்கத்தினால் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

மாலைதீவுக் கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்த குற்றச் சாட்டின் பேரில் மீன்பிடி கப்பலகளின் கப்டன்கள் நான்கு பேரிடமிருந்தும் தலா 12 ஆயிரம் தொடக்கம் 14 ஆயிரம் அமெரிக்க டொலர் வரையில் குற்றப்பணமாக அறவிடப்பட்டது. (த)

## தொழில்நுட்ப நிறுவன பரீட்சை யூன் 16

(யாழ்ப்பாணம்)

யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2003ம் ஆண்டிற்கான முதல் அரையாண்டுப் பரீட்சை அடுத்த மாதம் 16ம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் 3ம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## முக்கோண கிறிக்கெற் தொடரில் நியுசிலாந்து அணி சம்பியன்

(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான், நியுசிலாந்து அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் சர்வதேச கிறிக்கெற் போட்டித் தொடரில் நியுசிலாந்து அணி சம்பியனாகியுள்ளது.

தம்புள்ள றங்கிரிய மைதானத்தில் நேற்று பாகிஸ்தான் நியுசிலாநது அணிகளுக்கு இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நியுசிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது இதில் யுனிஸ் கான் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியுசிலாந்துஅணி 45.2ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இதில் ஸ்ரிபன் பிளமிங் 65 ஓட்டங்களையும் ஸ்கொட்சைடிஸ் 22 ஓட்டங்களையும் பெற்றனர் பந்து வீச்சில் முகமட் சாமி 42 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாகஸ்ரிபன் பிளமிங் இத்தொடரின் சிறப் பாட்டக் காரராக செய்வ்மலியும் தெரிவு செய்யப் பட்டனர். (இ-3)

---

**மட்டு சென்ற....**

பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இடம் பெற்ற கடத்தல் மற்றும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும் எடுத்து விளக்கியுள்ளனர். (த-14)

---

**யப்பான்...**

பட்டுள்ளதாவது.

டோககியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாடு திட்டமிட்டவாறு நடைபெறாது போனால்,நீண்டகாலமாக யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப் பட்டஇலங்கை மக்களிற்கு பாரிய நட்டம் ஏற்படும்.

இந்நிலையில் இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளிற்கு கூடிய விரைவல் தீர்வு காணப்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே முடிபுகள் காணப்படாமல் எஞ்சியுள்ள விடயங்களை, சூழ்நிலையின் அவசரம் கருதி அவற்றை ஒரு உடன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்

யுத்த அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் இலங்கை மக்களின் மனிதாபிமான புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தித் திட்ட நவடிக்கைகளுக்காக சர்வதேச சமூகம் தனது உறுதிப் பாடான நிலையை வெளியிட்டுள்ள அதேவேளை டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங் கும் நாடுகளின் மாநாட்டை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்நிலையில் அம்மாநாடு நடைபெறாவிட்டால் இலங்கை மக்கள் பாரிய நட்டத்தை அடைவார்கள் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

---

**புலிகளின்....**

கருத்து தெரிவிக்கையில் இடைக் கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் கருத்து அரசிற்கு உத்தியோக பூர்வமாக கிடைக்காது போனாலும் அது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆராய்ந்து வருவதுடன் இது தொடர்பாக நோர்வே அரசுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

---

**காரைநகர்....**

கடற்படையினரிடம் ஒப்படைக்கப் பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.பிரஸ்தாபச்சிப்பாய் முகாமில் இருந்து நேற்றுக்காலை தன்னிச்சையாக வெளியேறி அருகில் உள்ள கிராம மக்களிடம் தஞ்சம் புகுந்து தான் விடுதலைப் புலிகளிடம் சரண் அடைய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து,பொது மக்கள் மேற்படி சிப்பாயை காரைநகரில் உள்ள புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் அரசியல் துறை நிர்வாக இணைப்பாளர் சி.பாலனிடம் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகள் அவரை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற் பிரிவுத் தலைவர் போல் எறிக்யுயேக்கிடம் பொது மக்கள் முன்னிலையில் ஒப்படைக்க அவர்கள் பிரஸ்தாபச் சிப்பாயை நேற்றுப் பிற்பகல் காரைநகர் கடற்படையினரிடம் மீண்டும் ஒப்படைத்துள்ளனர்.

குளியாப்பிட்டியாவை பிறப்பிடமாகக் கொண்ட பிரஸ்தாபச் சிப்பாய் தங்காலை பூனுவ கடற்படை முகாமில் ஆறுமாதகால பயிற்சி பெற்றவர் என்றும் முகாமில் தன்னை அடித்துத் துன்புறுத்தியதாலேயே தான் தன்னிச்சையாக முகாமை விட்டு வெளியேறியதாகவும் பொது மக்களிடம் தெரிவித்துள்ளார். (இ-77,4,43,246)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு கல்விச் சமூகம் உதவ வேண்டும்

### கல்வி மேம்பாட்டுப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாவட்ட கல்விச் சமூகத்தவர்கள் அவர்களின் துயர் துடைக்கும் வகையில் மனிதாபிமான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும் என்று யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை,யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் தென்னிலங்கை மக்களின் துயர் துடைக்கும் வகையில் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்க முன்வந்திருக்கின்றமை முன்மாதிரி நடவடிக்கை என்றும் கல்வி மேம்பாட்டுப் பேரவை பாராட்டுத் தெரிவித்துள்ளது. (இ)

## இராணுவ புலனாய்வு உறுப்பினருக்கு பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

இராணுவ புலனாய்வு உறுப்பினர்களை அநாவசியமாக வீதிகளில் நடமாட வேண்டாமென மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு நகரில் இராணுவ புலனாய்வு உறுப்பினர்கள் அடுத்தடுத்து படுகொலை செய்யப்பட்டு வருவதையடுத்தே பொலிஸ் அத்தியட்சகர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார.

அதேவேளை வீதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸார் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுபவர்களை சோதனையிடும்படியும் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாக தேவை ஏற்படின் சோதனை நிலையங்களை அமைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (த-14)

## மாகாண மட்டத்தில் பொருளாதார ஆ.குழுக்கள்

(கொழும்பு)

மாகாண மட்டங்களில் பொருளாதார ஆணைக்குழுக்களை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குருநாகலையில் வடமேல் மாகாண ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கூட்டத்தில் தொடர்ந்தும் பேசிய அமைச்சர் பீரிஸ்,

மத்திய, வடமேல் மாகாணங்களில் 60 பொருளாதார செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தொழிலாளர்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)


**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

**நோய் வருமுன் காப்போம்**

**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.